விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 ஆவணி 16 திங்கட்கிழமை (01.09.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 257

SATS-TECH ENGINEERS



NEW PACKAGES & RENEWAL

CALL :- 222 5908/222 8812

# மக்களை வெளியேற அனுமதிக்குமாறு விடுதலைப்புலிகளிடம் அரசு கோரிக்கை

## அரச சார்பற்ற நிறுவனங்களின் ஊடாக

(கொழும்பு)

இடம்பெயர்ந்திருக்கும் இலட்சக் கணக்கான மக்கள் அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு வருவதற்குத் தடைகளை ஏற்படுத்த வேண்டாம் என விடுதலைப்புலிகளிடம் கோரிக்கை விடுக்குமாறு அரசாங்கம், அரச சார்பற்ற நிறுவனங்களிடம் தெரிவித்துள்ளது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் வெடி குண்டு மீட்பு

(மட்டக்களப்பு)

பாதுகாப்புப் பிரிவினரை இலக்கு வைத்துத் தாக்குதல் நடத்துவதற்காகப் பொருத்தி வைக்கப்பட்டிருந்த குண்டொன்று மீட்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்புப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்பு ஆய்த்திமலைக் காட்டுப் பகுதியில் இந்தக் குண்டு மீட்கப்பட்டதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். குண்டு மீட்கப்பட்டதை அடுத்து அப்பகுதியில் தேடுதல் நடத்தப்பட்டதாக மட்டக்களப்புப் பொலிஸார் மேலும் கூறினர். (ச)

## பொறிவெடித் தாக்குதலில் அதிகாரி உட்பட இருவர் பலி

(மட்டக்களப்பு)

அம்பாறை கஞ்சிக்குடிச்சாறு வனப்பகுதியில் விடுதலைப்புலிகளைத் தேடி அழிக்கும் நடவடிக்கை மேற்கொண்டு வரும் சிறப்பு அதிரடிப் படையினருக்கு எதிராக விடுதலைப் புலிகள் நடத்திய பொறி வெடித் தாக்குதலில் அதிகாரி ஒருவர் உட்பட இருவர் கொல்லப்பட்டுள்ளனர். இருவர் காயமடைந்துள்ளனர்.

நேற்றுக் காலை 11.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. கடந்த 4 நாள்களாகக் கஞ்சிக்குடிச்சாறு வனப் பகுதியில் நடவடிக்கை (12 ஆம் பக்கம் பார்க்க)

## இனந்தெரியாதோர் சூட்டதில் இரு இளைஞர்கள் உயிரிழப்பு

### கச்சேரியடியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் செயலகத்திற்கு அண்மையில் நேற்றுப் பிற்பகல் 2மணியளவில் இனந்தெரியாதோரால் இரு இளைஞர்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

இவ்விரு இளைஞர்களும் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. இதன்போது யாழ்ப்பாணம் பிறவுண் வீதியைச் சேர்ந்த நித்தியானந்தன் துஷ்யந்தன் (வயது-26), கந்தர்மடம் புகையிர நிலைய வீதியைச் சேர்ந்த கனகரத்தினம் நர்மதன் (வயது-26) ஆகிய இருவருமே கொல்லப்பட்டவர்கள் என அவர்களின் அடையாள (12 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னேரியில் தாக்குதல் முறியடிப்பு 20 படையினர் பலி; 60 பேர் காயம்

### விடுதலைப்புலிகள் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

வன்னேரியை நோக்கிப் படையினர் 4 நாள்களாக மேற்கொண்ட பெருமெடுப்பிலான முன்னகர்வுத் தாக்குதல்கள் முறியடிக்கப்பட்டுள்ளன.

இதில் 20 படையினர் கொல்லப்பட்டுள்ளனர். 60ற்கும் அதிகமான படையினர் காயமடைந்தனர் என விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர்.

வன்னேரிப் பகுதியை வல்வளைப்புச் செய்யும் நோக்கில் கடந்த 27 ஆம் திகதி தொடக்கம் 30 ஆம் திகதி வரையான 4 நாள்களில் படையினரின் கொமாண்டோ அணிகள் செறிவான எறி (12 ஆம் பக்கம் பார்க்க)

## அரச பாடசாலைகள் 3 ஆம் தவணைக்காக 4 ஆம் திகதி ஆரம்பம்

(திருகோணமலை)

சகல அரசாங்கப் பாடசாலை களும் மூன்றாம் தவணைக்காக எதிர்வரும் 4ஆம் திகதி வியாழக் கிழமை ஆரம்பமாகுமென கல்வி அமைச்சு நேற்று அறிவித்திருப்பதாக வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் வீ. இராசையா வலம்புரிக்குத் தெரிவித்தார்.

க.பொ.த. உயர்தரப் பரீட்சை நடைபெறும் பாடசாலைகள் எதிர்வரும் 4ஆம் திகதி ஆரம்பமாகுமெனவும் ஏனைய பாடசாலைகள் இன்று முதலாம் (12 ஆம் பக்கம் பார்க்க)

## புறக்கோட்டைக் குண்டுவெடிப்புக்கும் விடுதலைப்புலிகளுக்கும் தொடர்பில்லை

### பகுப்பாய்வு நிபுணர் ஒருவர் தெரிவிப்பு

(கொழும்பு)

புறக்கோட்டைப் பகுதியில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் தொடர்பில்லை. பாதையோரக் கடைகளை அகற்றுவதற்காக இனந்தெரியாத நபர்கள் மேற்கொண்ட குண்டுத் தாக்குதலே இது என்று வெடிகுண்டுப் பகுப்பாய்வு நிபுணர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

குண்டு வெடிப்பு இடம்பெற்ற இடத்தையும் வெடித்த குண்டின் துகள்களை பகுப்பாய்வு செய்ததையும் வைத்துப் பார்க்கும் போது இந்தச் சம்பவத்திற்கும் (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஷெல் காஸின் விலை 126 ரூபாயால் உயர்வு

(கொழும்பு)

சமையலுக்குப் பயன்படுத்தப்படும் ஷெல் காஸ் சிலிண்டர் ஒன்றின் விலை நேற்று முதல் 126 ரூபாயினால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதற்கான அனுமதியை நுகர்வோர் விவகார அதிகார சபை வழங்கியுள்ளது. இதன்படி 12.5 கிலோக்கிராம் சமையல் எரிவாயுவின் விலை ஆயிரத்து 737 ரூபாயிலிருந்து ஆயிரத்து 863 ரூபாயாக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை (12 ஆம் பக்கம் பார்க்க)

# அரசாங்கத்தின் பிரசாரத்தை முறியடித்த விடுதலைப்புலிகளின் வான் தாக்குதல்

## 'லக்பிம' வார ஏட்டில் தெரிவிப்பு

(கொழும்பு)


திருகோணமலை மீதான தாக்குதல் போர் தொடர்பான கணிப்பீட்டை முற்றாகவே மாற்றியிருக்கும் என்பதற்கான சாத்தியக்கூறுகள் அதிகம் உண்டென்று கொழும்பிலிருந்து வெளிவரும் லக்பிம ஆங்கில வார ஏடு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்த ஏட்டின் பாதுகாப்புப் பத்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளவற்றின் முக்கிய பகுதிகள் வருமாறு,

திருகோணமலை நகரை பெரும் வெடி ஓசை கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 9.10 மணியளவில் அமைதியாக இருந்து அதிரவைத் தது. அதனைத் தொடர்ந்து வானத்தை நோக்கிச் சரமாரியான தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

வாண வேடிக்கை போன்று வானம் காட்சியளித்தது. மணலாற்றிலுள்ள இராணுவத் தலைமையகத்தைக் கடந்த ஏப்ரல் 21 ஆம் திகதி தாக்கிய பின்னர் வான் புலிகள் நடத்திய தாக்குதல் இதுவாகும்.

வன்னியில் அதிக பிரதேசங்களைப் படையினர் கைப்பற்றி வருவதனால் வான் புலிகள் செயற்திறன் அற்ற நிலைக்குத் தள்ளப்படலாம் என்பது தென்பகுதி மக்கள் பலரினது கருத்து. ஆனால் (12 ஆம் பக்கம் பார்க்க)



வண.ரி.எஸ். யோசுவா எழுதிய 'ஒரு நதியின் ஊற்று' நூல் வெளியீடு அண்மையில் யாழ்ப்பாணக் கல்லூரி ஒட்லி மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சிறப்பு ஆய்வாளர்களாக யாழ்.கல்வியியற் கல்லூரி உப பீடாதிபதி பா.தனபாலன், யாழ்.பல்கலைக்கழக கிறிஸ்தவத்துறை விரிவுரையாளர் வண.கலாநிதி ஜெ.ஜெபரட்ணம், யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் என்.ஏ.விமலேந்திரன், மூளாய் ஆசுகவி எஸ்.சிவசுப்பிரமணியம், வண.ரி.எஸ்.யோசுவா அவர்களும் கலந்து உரையாற்றுவதையும் தென்னிந்தியத் திருச்சபை பேராயர் கலாநிதி டி.எஸ்.தியாகராஜா புத்தகத்தை வெளியிடுவதையும் படங்களில் காணலாம்.

# அமைச்சர் சந்திரசேகரனின் கார் மீது நேற்றுத் தாக்குதல்

(கொழும்பு)

மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் அமைச்சருமான பி.சந்திரசேகரனின் காரின் மீது நேற்று மாலை கொழும்பின் புறநகர் அவிசாவளையில் வைத்து தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

எனினும் சம்பவ நேரத்தில் அமைச்சர் சந்திரசேகரன் காரில் பயணிக்கவில்லை.

பதுளையில் இருந்து கொழும்புக்கு பயணித்துக் கொண்டிருந்த சந்திரசேகரனின் கார் முன்னால் சென்ற முச்சக்கர வண்டியுடன் மோதியபோது அதில் பயணித்த பொதுமகன் ஒருவர் பலியானார். முச்சக்கர வண்டிச் சாரதி காயமடைந்தார்.

இதனையடுத்துப் பிரதேச பொதுமக்கள் காரைத் தாக்கினர். இதன்போது சந்திரசேகரனின் பாதுகாவலரும் வாகன ஓட்டுநரும் காயமடைந்தனர்.

இந்த நிலையில் நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரச் சம்பவ இடத்திற்கு சென்ற அவிசாவளை பொலிஸ் அதிகாரி ஒருவரும் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளார். (ச-5)

# நாய் வளர்ப்பவர்களுக்கு குறட்டை விடும் ஆபத்து

## சுவீடன் மருத்துவர்கள் எச்சரிக்கை

செல்லப் பிராணியாக நாய் வளர்க்கும் வீடுகளிலுள்ள குழந்தைகள் பிற்காலத்தில் குறட்டை மன்னர்களாக மாறும் வாய்ப்புள்ளதாக சுவிடன் மருத்துவ நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். குறட்டை ஏற்பட பல காரணங்கள் உள்ளன. இருதயநோய் போன்ற நோய்களுக்கான அறிகுறியாகவும் குறட்டை விளங்குகிறது.

அதேசமயம் நாய் போன்ற வளர்ப்புப் பிராணிகளிலிருந்து நோய்க் கிருமிகள் குழந்தைகளுக்கு பரவி சுவாசக் குழாய் பாதிக்கப்பட்டு சுவாசம் தடைப்படுவதாலும், பிற்காலத்தில் அவர்கள் குறட்டை விடும் நிலைக்கு தள்ளப்படுவது தமது ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளதாக இந்த மருத்துவ நிபுணர்கள் கூறுகின்றனர்.

மேலும்,குறட்டை விடுபவர்களில் ஐந்திலொரு பகுதியினர் ஒருவித பாதிப்புமின்றி குறட்டை விடுவாதகக் கூறும் இந்த மருத்துவ நிபுணர்கள், ஏற்கனவே சுவாசக் கோளாறு உள்ளவர்களுக்கு 50வயதுக்குபின் குறட்டை ஏற்படுவதாகவும், பகலில் தூங்கி வருபவர்களுக்கு இரவில் படுக்கும் போது குறட்டை விடுவதாகவும் தமது ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றனர்.தி

# கையடக்கத் தொலைபேசிகளை மீளப்பதிவு செய்யும் புதிய நடைமுறை

## பாவனையாளர்கள் பெரும் சிரமம்

கையடக்கத் தொலைபேசி மற்றும் சீ.டி.எம்.ஏ தொலைபேசிகளை பயன்படுத்துவது தொடர்பில் தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு அண்மையில் அறிமுகப்படுத்தியிருக்கும் புதிய விதிமுறைகளானது தொலைபேசிப் பாவனையாளர்களை பெரும் சிரமத்தில் தள்ளியிருக்கின்றது.

கையடக்கத் தொலைபேசிகளையும் சிம் அட்டைகளையும் கொள்வனவு செய்யும் போது அவற்றை அனுமதி பெற்ற விற்பனை முகவர்களிடம் மாத்திரமே கொள்வனவு செய்யவேண்டுமென ஆணைக்குழு கண்டிப்பாக அறிவித்துள்ளது.

அத்துடன் கையடக்கத் தொலைபேசிக்கான சிம் அட்டையைப் பெற தேசிய அடையாள அட்டையை சமர்ப்பிப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளதுடன் அடையாள அட்டைக்குரியவரை தவிர வேறு எவரும் குறித்த சிம் அட்டையை பயன்படுத்த முடியாது எனவும் தொலைத்தொடர்பு ஒழுங்கு படுத்தும் ஆணைக்குழு கூறியுள்ளது.

அரசாங்கப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் வகையில் பல்வேறு சட்டவிரோத நடவடிக்கைகளுக்கு இந்தத் தொலைபேசிகள் பயன்படுத்தப்படுவதை தடுக்கவே பாதுகாப்பு அமைச்சின் ஆலோசனையுடன் இந்தப் புதிய விதிமுறைகள் அமுல் படுத்தப்பட்டுள்ளது.


## தேவை

சித்த சுவாதீனமற்ற பெண்ணொருவரை பராமரிப்பதற்கு முழுநேரப் பெண் பராமரிப்பாளர் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்.

தொடர்பு:- 0776333133
0602218161

(1645)


கையடக்கத் தொலைபேசியை பயன்படுத்துவோரும் சிம் அட்டையை பயன்படுத்துவோரும் தொலைத்தொடர்பு இணைப்பை வழங்கியவரிடம் இருந்து பெற்ற சான்றிதழை தம் வசம் எந்தநேரமும் வைத்திருக்கவேண்டும்.

அத்துடன் சீ.டி.எம்.ஏ தொலைபேசிகள் பதிவு செய்யப்பட்ட முகவரியில் மாத்திரமே பயன்படுத்தப்படவேண்டுமெனவும் வேறு இடங்களிற்கு எடுத்துச் செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளதாகவும் ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது.

### பரீட்சிப்பதற்கு பொலிஸாருக்கு அதிகாரம்

இந்த விதிமுறை ஒழுங்காக கடைப்பிடிக்கப்படுகின்றதா என்பதை பரீட்சிப்பதற்கான உரிமையை பாதுகாப்பு அமைச்சு படையினருக்கும் பொலிஸாருக்கும் வழங்கியிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

படையினரோ அல்லது பொலிஸாரோ கேட்கும் பட்சத்தில் கையடக்கத் தொலைபேசியை பயன்படுத்துபவர் அதற்குரிய சிம் அட்டையின் உரிமை தொடர்பான ஆவணத்தை சமர்ப்பிக்க வேண்டுமென தொலைத் தொடர்பாடல் ஆணைக்குழுவின் தலைவர் பிரியந்த காரியப்பெரும தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து வீதிச் சோதனை சாவடிகளில் கடமையில் ஈடுபட்டுள்ள படையினரும் பொலிஸாரும் உரிய ஆவணங்களைச் சமர்ப்பிக்கத் தவறும் கையடக்கத் தொலைபேசி பாவனையாளர்களில் சிம் அட்டைகளை பறிமுதல் செய்வதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

கொழும்பு உள்ளிட்ட நாட்டின் பல்வேறு பாகங்களிலும் இந்த நடைமுறையை பொலிஸார் கடைப்பிடிக்கத் தொடங்கியுள்ளனர்.

கல்முனைப் பிரதேசத்தில் கடந்த சில வாரங்களாக பொலிஸாரினால் கையடக்கத் தொலைபேசிகளின் சிம் அட்டைகள் பரிசோதனைக்குட்படுத்தப்படுவதாகவும் உரியவரின் பெயர், முகவரி இல்லாத, சகல சிம் அட்டைகளும் பொலிஸாரினால் பறிமுதல் செய்யப்பட்டு வருவதாகவும் பிரதேசவாசிகள் பி.பி.சி செய்திச் சேவைக்கு தெரிவித்தனர்.

'என்னுடைய வீட்டில் ஒரு கையடக்கத் தொலைபேசியே இருக்கிறது. அதனை எனது மகனே கொள்வனவு செய்ததால் அவரது பெயரிலேயே சிம் அட்டை பதிவு செய்யப்பட்டுள்ளது. நான் அதனை வைத்திருக்கும் போது பரிசோதித்த பொலிஸார் சிம் அட்டையை கழற்றி வீசிவிட்டனர்' என கல்முனையைச் சேர்ந்த அப்துல் ரசாக் என்னும் மீனவர் ஒருவர் பி.பி.சிக்கு தெரிவித்தார்.


'எமது பொருளாதார நிலைமையின் காரணமாக ஆளுக்கொரு கையடக்கத் தொலைபேசியை பாவிக்க எம்மால் முடியாது எம்மைப் போன்றவர்கள் இந்தப் புதிய விதிமுறையினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்' என்றும் ரசாக் கூறினார்.

### வழக்குத் தாக்கல்

இதற்கிடையில் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய விதிமுறையை எதிர்த்து சட்டத்தரணி சுதர்ஷனா குணவர்த்தன என்பவர் மேல் முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

இந்த வழக்கினை விசாரித்த நீதிமன்றம் தொலைத்தொடர்பு ஒழுங்கு படுத்தும் ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஆகியோருக்கு அழைப்பாணை அனுப்பியுள்ளது.

தொலைத்தொடர்பாடல் சட்டத்தின் பிரகாரம் இதற்குப் பொறுப்பான அமைச்சரே வர்த்தமானி மூலம் இந்த அறிவித்தலை பிறப்பிக்க வேண்டுமெனவும் ஆனால் தற்போது ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் தனது அதிகாரத்துக்கு அப்பாற்பட்ட வகையில் ஒருதலைப்பட்சமாக இந்த அறிவித்தலை வெளியிட்டுள்ளதாகவும் மனுதாரர் குற்றம் சாட்டியுள்ளார்.



### யாழில் பதிவு செய்யும் வசதிகள் இல்லை

இதேவேளை யாழ்ப்பாணக் குடாநாட்டில் கையடக்கத் தொலைபேசிப் பாவனையாளர்கள் அவற்றை மீள் பதிவு செய்வதற்கு உரிய வசதிகள் எதுவும் செய்யப்படவில்லை.

யாழ்.மாவட்டத்தில் கையடக்கத் தொலைபேசிகளை விற்பனை செய்த நிறுவனங்களின் கிளை அலுவலகங்கள் மூடப்பட்டுள்ளதை இவற்றின் விற்பனை முகவர்களும் தமது விற்பனை நடவடிக்கைகளை இடைநிறுத்தியுள்ளனர்.

இதன் காரணமாக யாழ்ப்பாண மக்கள் தமது கையடக்கத் தொலைபேசிகளை மீள் பதிவு செய்ய முடியாத நிலையிலுள்ளனர்.

பலர் தங்களது கையடக்கத் தொலைபேசிகளை கொழும்பில் வாங்கியுள்ளதால் தமது மீள் பதிவுகளை எங்கே மேற்கொள்வதென்று தெரியாத நிலையிலுள்ளனர்.

இதே பிரச்சினையை நாடெங்கிலுமுள்ள பெரும்பாலானோர் எதிர்நோக்குவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையிலுள்ள சுமார் 20 மில்லியன் மக்களில் 12 மில்லியன் பேர் தொலைபேசிப் பாவனையாளர்கள் என்பதும் இவர்களில்10 மில்லியன் பேர் கையடக்கத் தொலைபேசி பாவனையாளர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இன்று ஒரு தகவல்

## மனித இயல்புகள்

இந்த உலகத்தில் உள்ள ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு குணம் உண்டு. ஒரு நாயின் குணம் என்னவென்று நமக்குத் தெரியும்.

ஒரு கழுதையின் குணம் என்னவென்றும் தெரியும். அதே மாதிரி ஒரு குரங்கு என்ன செய்யும் என்றும் நமக்குத் தெரியும். ஆனால் ஒரு மனிதனுடைய குணம் என்ன என்பதை நாம் சரியாக சொல்லிவிட முடியாது.

சிலநேரம் நாய் மாதிரியும்... சிலசமயம் குரங்கு போலவும் நடந்துகொள்ளுவான். எந்த நேரத்தில் எந்தக் குணத்தில் இருப்பான் என்று கண்டுபிடிப்பது கஷ்டம்.

பேச்சுக் கொடுத்துப் பார்த்தால் தான் பதில் வரும் விதத்தை வைத்து அவன் எந்த அவதாரத்தில் இருக்கிறான் என்பதை முடிவு செய்துகொள்ளலாம்.

அது சரி! மனிதன் ஏன் இப்படியெல்லாம் நடந்து கொள்ளுகிறான்? இதற்கு ஒரு புராணக்கதையைக் கேட்டீர்களானால் அதற்குப் பின் இப்படி கேள்வியெல்லாம் கேட்கமாட்டீர்கள்.

ஆண்டவன் ஜீவராசிகள் எல்லாவற்றையும் படைத்த பின்னர் ஒவ்வொன்றுக்கும் சராசரியாக 30 வருட ஆயுள் காலம் என்று முடிவுசெய்தார். இதைக் கேள்விப்பட்ட கழுதை...நாய்... குரங்கு... மனிதன்... இந்த நான்கு பேருக்கு மட்டும் இதில் திருப்தி ஏற்படவில்லை. உடனே பகவானிடம் முறையிட விரும்பினார்கள். எல்லோரும் நேராக நாரதரிடம் முறையிட்டனர்.

நாரதரும் இவர்களை கடவுளிடம் அழைத்துக் கொண்டு போனார். முதலில் கழுதை முறையிட்டது.

"கடவுளே! நான் நாள் முழுவதும் பொதி சுமந்து காலம் தள்ளுகிறேன். கஷ்டப்பட்டு பொதி சுமக்கும் எனக்கு 30 வருட ஆயுள் என்பது மிகவும் அதிகம்! கொஞ்சம் குறைத்துக் கொண்டால் பரவாயில்லை" என்றது !

பகவான் பார்த்தார். அதன் ஆயுளை 18 வருடமாகக் குறைத்துவிட்டார்.

அடுத்ததாக நாய் வந்து நின்றது.

"என்னுடைய பிழைப்பே நாய்ப்பிழைப்பு... எனக்கு எதற்கு 30 வருடம்? அவ்வளவு நாள் நான் கஷ்டப்பட வேண்டுமா?" என்றது நாய். அது சொல்வது சரி என்று நினைத்த கடவுள் அதன் ஆயுளை 12 வருடமாகக் குறைத்துவிட்டார். நாயும் சந்தோஷமாக வாலாட்டிக் கொண்டே போனது. அடுத்ததாக ஒரு குரங்கு வந்து நின்றது.

"எப்பொழுதும் மரத்திலும் கிளையிலும் தொங்கிக் கொண்டிருக்கும் எனக்கு எதற்கு 30 வருடம்" என்றது. கடவுள் பார்த்தார். அதையும் பத்து வருடமாகக் குறைத்து விட்டார்.

கடைசியாக மனிதன் போய் நின்றான்.

"ஈஸ்வரா! எனக்கு 30 வருடம் போதாது! நான் இந்த உலகத்தில் நிறைய சாப்பிடவேண்டும். தூங்கவேண்டும். நிறைய அனுபவிக்கவேண்டும். அதனால் எனது ஆயுளை அதிகப்படுத்தினால் நல்லது" என்றான்.

கடவுள் யோசித்தார். ஆயுளை அதிகப்படுத்தினால் பூமியில் இடப் பிரச்சினையெல்லாம் வரும் என்று கொஞ்சம் தயங்கினார்.

அதைப் பார்த்த மனிதன் அதற்கும் ஒரு வழியைச் சொன்னான். "எதற்காக யோசிக்கிறீர்கள்? கழுதைக்கு குறைத்த 12 வருடம், நாய்க்குக் குறைத்த 18 வருடம், குரங்குக்குக் குறைத்த 20 வருடம் எல்லாவற்றையும் சேர்த்து எனக்கு கொடுத்து விட்டீர்களானால் போதும்..." என்றான். "சரி அப்படியே ஆகட்டும்!" என்று சொல்லி விட்டார் கடவுள். அதன் பலன் என்ன என்பது இப்பொழுது தான் தெரிகிறது. இன்றைக்கு மனிதன் 30 வருடம் வரை சந்தோஷமாக இருக்கிறான். அடுத்த 12 வருடம் கழுதையிடம் வாங்கியதால் அது மாதிரியே குடும்பப் பாரத்தை சுமக்கிறான். அடுத்த 12 வருடம் நாயிடம் வாங்கியவன் சொத்து சேர்ப்பதற்கும் அதைக் கட்டிக் காப்பாற்றவும் நாய் மாதிரி அலைகிறான்.

அடுத்த 20 வருடம் குரங்கிடம் வாங்கியது. வயதாகி... மரியாதை போய்... யார் என்ன சொன்னாலும் அவர்கள் சொற்படி ஆடவேண்டிய நிலைமை. அன்றைக்கு வாங்கிய "ஆயுள்கடன்" மனிதனை என்னபாடெல்லாம் படுத்துகிறது பார்த்தீர்களா? ஒருவாரத்துக்கு முன் எனது நண்பர் ஒருவரைச் சந்தித்தேன். "என்னசார்... கொஞ்ச நாளாக உங்களைப் பார்க்கவே முடியவில்லை!" என்றேன். அவர் கொஞ்சம் எரிச்சலுடன் என்னை முறைத்து பார்த்து விட்டு, "வீடு ஒன்று கட்டுவதற்காக அப்ருவலுக்காக நாய் மாதிரி அலைந்து கொண்டிருக்கிறேன்" என்று சொல்லி விட்டு வேகமாக ஓடினார். இதற்கு என்ன அர்த்தம்? என்றால் அவர் அந்த மூன்றாவது நிலையில் இருக்கிறார்! என்று அர்த்தம்.

தென்கச்சி கோ சுவாமிநாதன்

# ஆசிய நாடுகளில் இந்தியாவின் வறுமைநிலை இலங்கையை விட அதிகரிப்பு -ஆசிய அபிவிருத்தி வங்கி

ஆசிய அபிவிருத்தி வங்கியின் 2008ஆம் ஆண்டுக்கான ஆய்வறிக்கையின்படி ஆசிய நாடுகளில் இந்தியாவானது இலங்கை, பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய நாடுகளை விட மோசமான வறுமை நிலைக்குதள்ளப்பட்டிருக்கின்றது .

புள்ளி விபரங்களின்படி இந்தியாவில் 54 .8 வீதமானோர் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழ்கின்றனர். உலக வங்கியின் புதிய ஆய்வு அறிக்கைகளின் படி நாளொன்றுக்கு 1.25 அமெரிக்க டொலர்களுக்கு குறைவான தொகையை வருமானமாகப் பெறும் சகலரும் வறுமைக்கோட்டுக்கு கீழேவாழ்பவர்கள் என தெரிய வருகின்றது. முன்னதாக இது 1 டொலர் என்று கணக்கிடப்பட்டிருந்தது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் அறிக்கையின்படி ஆசியக் கண்டத்தில் இந்தியாவை விடமோசமாக பாதிக்கப்பட்டிருக்கும் நாடாக நேபாளம் விளங்குகிறது. இங்குள்ள மக்களில் 55 சதவீதத்திற்கும் மேற்பட்டோர் வறுமைக் கோட்டுக்கு கீழே வாழ்ந்து வருகின்றனர் என அது சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கையில்5.9வீதமானோரும் பாகிஸ்தானில்24.9வீதமானோரும் பங்களாதேஷில் 42. 9 வீதமானோரும் வறுமைக்கோட்டுக்கு கீழே வாழ்ந்து வருகின்றனர். 2005ஆம் ஆண்டில் இந்தியாவில் 62.19 கோடி பேர் வறுமைக் கோட்டுக்கு கீழே வாழ்ந்தனர் எனத் தெரிவிக்கும் ஆசிய அபிவிருத்தி வங்கி உலக வங்கியின் அறிக்கையின் படி தற்போது இது 45.6கோடியாக இருக்கிறது என்று தெரிவிக்கின்றது. இது வறுமையின் பிடியில் வாழும் ஆபிரிக்காவின் சகாரா மக்கள் தொகையை விட அதிகமாகும் எனவும் அது தெரிவிக்கின்றது.

வறுமை வீதத்தை குறைப்பதற்கு முறையான பொருளாதார கொள்கைகளை அறிமுகப்படுத்தி செயல்படுத்த வேண்டும் எனவும் புதிய கொள்கை வகுப்பில் அரசாங்கங்கள் அக்கறைகாட்ட வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இவ் ஆய்வில் முதல் காலாண்டில் கல்வியறிவு வீதமும் கணக்கிடப்பட்டுள்ளது. பெருந்தோட்டப் பகுதிகளில் கல்வியறிவு வீதம் 76வீதமாகவும் நகரப் புறங்களில் 95 வீதமாகவும் கிராமப் புறங்களில் 93வீதமாகவும் உள்ளது.

இவ் வித்தியாசங்களைப் பார்க்கும்போது ஆண்கள் 94வீத கல்வியறிவையும் பெண்கள் 91.1 வீத கல்வியறிவையும் கொண்டிருக்கின்றனர். (ஓ-6)

# கிளிநொச்சி வைத்தியசாலைக்கான டீசலின் அளவு குறைப்பு ; தினமும் 8 மணிநேர மின்வெட்டு

கிளிநொச்சி வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டுவந்த டீசலின் அளவு குறைக்கப்பட்டுள்ளதை அடுத்து வைத்தியசாலையில் நாளாந்தம் எட்டு மணி நேர மின்வெட்டு அமுல் செய்யப்பட்டு வருவதாக வைத்தியசாலையின் பணிப்பாளர் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலைக்கு தேவையான மின்சா ரம் மின் பிறப்பாக்கி மூலமே உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. இதற்காக மாதாந்தம் பதினைந்தாயிரம் லீற்றர் டீசல் வழங்கப்பட்டுவந்தது. ஆனால் இப்போது2ஆயிரத்து 750லீற்றர் டீசல் மாத்திரமே வழங்கப்பட்டு வருவதாக வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

அவர் இதுகுறித்து மேலும் தெரிவித்ததாவது, கிளிநொச்சி வைத்தியசாலைக்கு மாதாந்தம் பதினைந்தாயிரம் லீற்றர் டீசலும் ஐந்நூறு லீற்றர் பெற்றோலும் வழங்கப்பட்டு வந்தது. ஆனால் இப்போது 2 ஆயிரத்து 750லீற்றர் டீசல் மாத்திரமே வழங்க்ப்பட்டு வருகிறது. பெற்றோல் அறவே வழங்கப்படுவதில்லை.

இந்த நிலையைக் கருத்தில் கொண்டு நிலைமையை சமாளிப்பதற்காக நாளாந்தம் எட்டுமணி நேர மின்சார வெட்டு அமுல்படுத்தப்பட்டு வருகிறது. கிளிநொச்சி வைத்தியசாலைக்கு தற்போது அதிகளவில் நோயாளர்கள் வருகை தருகின்றனர்.

இதனால் மருந்துகளுக்கான தேவையும் அதிகரித்துள்ளது. காலாண்டுக்கான மருந்துவகைகள் வந்து சேர்ந்துள்ளன. மேலும் மருந்து வகைகள் தேவை என சுகாதார அமைச்சைக் கோரி உள்ளார். (ஓ-6)

## இராசி பலன்

01.09.2008
(ஆவணி 16, திங்கட்கிழமை
துதியை பின்னிரவு 1.07மணிவரை
உத்தரம் பின்னிரவு 2.22மணிவரை
இராகுகாலம்-7.35-9.05மணிவரை
சுபநேரம்-12.05-1.35 மணிவரை
நல்லூர் கந்தசுவாமி வைரவர் உற்சவம்

| | |
|---|---|
| மேடம் | காரிய அனுகூலம், பொருள் சேர்க்கை, நண்பர்கள் உதவி. உடல் நலம். |
| இடபம் | வியாபாரநன்மை, சிறுவியாதி. முயற்சிதாமதம், பணக் குறைவு. |
| மிதுனம் | தாய்வழி உறவு, மனச்சஞ்சலம. சுபசெலவு, முயற்சி தாமதம். |
| கடகம் | கூட்டு முயற்சி, இனிய நிகழ்வு. தனவருவாய், பிரயாண சுகம். |
| சிங்கம் | விவாதம். காரிய தாமதம், வீண் செலவு, கௌரவக்குறைவு. |
| கன்னி | வெகுமானம், கற்பனை மிகுதி, புதிய முயற்சி, நண்பர்கள் சந்திப்பு. |
| துலாம் | பிதாசிந்தை, பிரயாணம். முயற்சிதாமதம், சயனசுகக் குறைவு. |
| விருச்சிகம் | கீர்த்தி, காரிய நன்மை, குடும்ப சுகம் விருந்துபசாரம். |
| தனுசு | அதிகாரம், நண்பர்கள் உதவி. கடின உழைப்பு, தேக நலன் |
| மகரம் | வீண்பயம். புதியதிட்டமிடல். முயற்சிதாமதம், எதிர்பாராத நன்மை. |
| கும்பம் | பிரயாண பயம், காரிய தடங்கல், ஆரோக்கியக் குறைவு. பணக்குறைவு. |
| மீனம் | செல்வாக்கு. காரிய அனுகூல ம். திடீர் பயணம், அபூர்வ சந்திப்பு. |

வளவன்

# இவ் வருடத்தின் முதற்காலாண்டில் வேலையற்றோர் தொகை 5.1 வீதம்

(கொழும்பு)

இலங்கையில் இவ்வருடம் முதல் காலாண்டில் வேலையற்றோர் தொகை மற்றும் அது தொடர்பான தரவுகளை குடிசன மதிப்பீட்டு புள்ளிவிபர திணைக்களம் அறிவித்துள்ளது.

அதன்படி ஜனவரி மாதம் முதலான காலாண்டில் இலங்கையில் வேலையற்றோரின் தொகை 3இலட்சத்து 82ஆயிரத்து 403. அதாவது 5.1வீதம் எனஅறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் முதல் காலாண்டில் இது 6.1 வீதமாக இருந்தது.

இத் தொகையில் அதிகமாக இடம் பிடித்திருப்போர் 15முதல் 19 வயதுக் கிடைப்பட்டோர்.

மேலும் இதில் ஆண்களிலும் பார்க்க பெண்களே கூடுதலாக உள்ளனர்.

இதேவேளை வேலையில்லாதோரை கல்வித் தராதரங்களின் அடிப்படையில் பார்க்கும் போது க.பொ.த சாதாரண தரத்திற்கு கீழ்ப்பட்டோர் 3.2 வீதமாகவும் க.பொ.த சாதரண தரமுடையோர் 6.4 வீதமாகவும் உயர்தரம் மற்றும் அதற்கு மேற்பட்ட தகைமையுடையோர் 11 வீதமாகவும் உள்ளனர். (ஓ)

# தாழ்வு மனப்பான்மையுள்ள மாணவர்கள் மன அழுத்த நோய்க்கு ஆளாகின்றனர்

(டொரன்டோ)

மற்றவர்களை விட நாம் தரத்தில் குறைந்தவர்கள் என்ற தாழ்வு மனப்பான்மை கொண்ட மாணவர்கள், எளிதில் மன அழுத்த நோய்க்கு ஆளாகின்றனர் என கனடா நாட்டில் நடத்தப்பட்ட ஆய்வு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யார்க் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மரியாம் மான்கிரேன் மற்றும் எட்வெட் டி என்பவர்கள் மன அழுத்தம் தொடர்பாக ஆய்வு ஒன்றை மேற்கொண்டனர்.

அந்த ஆய்வு தொடர்பாக கூறப்பட்டுள்ளதாவது,

சமூக அந்தஸ்தில் நாம் குறைந்தவர்கள் என்ற தாழ்வு மனப்பான்மை கொண்டவர்கள், பண விஷயங்களிலும், மற்ற விஷயங்களிலும் நாம் குறைந்த வர்கள் என்ற எண்ணம் கொண்ட வர்கள் பாதகமான சூழ்நிலைகளி லிருந்து தங்களை விடுவித்துக் கொள்ள முடியாதவர்கள் மன அழுத்த நோய்க்கு ஆளாகின் றனர்.

பட்டப் படிப்பு படிக்கும் 150 மாணவர்களிடம். ஆய்வு நடத்தியதில் இந்த முடிவுகள் தெரியவந்தன. இப்படிப்பட்ட மன அழுத்த நோய்க்கு ஆளானவர்களால் ஒரு பிரச்சினையில் இருந்த தங்களின் மனதை வேறு விஷயங்களுக்கு திருப்ப மறுக்கின்றனர். மேலும் தோல்வியை ஏற்றுக் கொள்ள மறுப்பதும் அவர்களை மன அழுத்த நோய்க்கு ஆட்படுத்துகிறது.

இவ்வாறு ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-6)

## தாச்சி சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம் இலங்கை வங்கி மற்றும் வர்த்தக வங்கியின் ஆதரவுடன் யாழ். மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கம் நடாத்தும் 13ஆவது தாச்சி சுற்றுப் போட்டியில் இன்று திங்கட்கிழமை மாலை 4.30 மணிக்கு அளவெட்டி பாரதி விளையாட்டுக்கழகமும் எதிர் உடுவில் ஆலடி சிந்துவிளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

நாளை செவ்வாய்க்கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் மயிலிட்டி இளைஞர் ஒன்றியம் விளையாட்டுக்கழகமும் எதிர் சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. ஓ

## உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

உதைபந்தாட்ட நாயகன் அமரர் தம்பிப்பிள்ளை இரத்தினசிங்கம் ஞாபகார்த்தமாக பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் ஆதரவுடன் வதிரி டயமன்ட்ஸ் விளையாட்டுக் கழகம் நடாத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில்இன்று திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு வதிரி டயமன்ட்ஸ் விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளA பிரிவுக்கான போட்டியில்மனோகரா விளையாட்டுக் கழகமும் எதிர்திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. ஓ



அண்மையில் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தின் தொழில்பயிற்சி நிலைய மாணவர் ஒன்றுகூடல் கரைப்பிரான் ஆலய சமூக சேவை மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம் மங்கல விளக்கேற்றுவதையும், சிறப்பு விருந்தினரான உதவிப் பிரதேச செயலர் திருமதி ஈழவரசி அன்ரன் யோக நாயகம், கௌரவ விருந்தினர் கிராம சேவையாளர் திரு சந்தரராஜா ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.

## மஹா கும்பாபிஷேகம்

சுழிபுரம் குடியிருப்பு ஓடையம்பதி வைரவர் என அழைக்கப்படும் பாலாம்பிகாதேவி சமேத வைத்தீஸ்வர தேவஸ்தானத்தில் தெட்சணாமூர்த்தி பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 11ஆம் திகதி வியாழக் கிழமை காலை 7 மணிக்கு நடைபெறவுள்ளது. இதற்கான ஆரம்பக் கிரியைகள் புதன் கிழமை காலை 6 மணி முதல் இடம் பெறவுள்ளன. ஓ

## ஆன்மீக நிகழ்வு

தொண்டைமானாறு அருள்மிகு செல்வ சந்நதி முருகன் ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையால் நடாத்தப்படும் ஆன்மீக நிகழ்வுகளில் இன்று திங்கட்கிழமை காலை 10மணியளவில் "பேசா அநுபூதி" என்ற பொருளில் கோப்பாய் றோ.க. வித்தியாலய அதிபர் ச.லலீசன் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார். ஓ

## மஹோற்சவம்

(பருத்தித்துறை)

வல்வை நெடிய காட்டுத் திருச்சிற்றம்பலப் பிள்ளையார் ஆலய மஹோற்சவம்6 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது.


இவ் உற்சவத்தில் 11ஆம் திகதி வியாழக் கிழமை வேட்டைத் திருவிழாவும், 13ஆம் திகதி சனிக்கிழமை மாலை சப்பறத் திருவிழாவும், 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை தேர்த்திருவிழாவும், 15ஆம் திகதிதிங்கட்கிழமை காலை தீர்த்தத் திருவிழாவும், 17ஆம் திகதிபுதன் கிழமை மாலைபூங்காவனத் திருவிழாவும் நடைபெறவுள்ளது. ஓ

◆◆◆

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி ஸ்ரீ அரசகேரிப் பிள்ளையார் கோவில் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 5ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 11 தினங்கள் இடம்பெறவுள்ளது.

தினமும் காலைத் திருவிழா 8.30 மணிக்கும் மாலைத்திருவிழா 3மணிக்கும் அபிஷேகத்துடன் ஆரம்பமாகி நடைபெறும். ஓ





## யாழ்.செய்திகள்


## குரு பூஜை

(யாழ்ப்பாணம்)

ஆத்மஜோதி முத்தையாவின் குருபூஜை ஏழாலை ஆத்மஜோதி தியான மண்டபத்தில் எதிர்வரும் 8 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 4மணிக்கு நடைபெறவுள்ளது.

அத்துடன் அன்று ஏழாலை இலந்தைக் கலட்டி ஸ்ரீபாதாள ஞானவைரவர் கோயிலில் நடைபெறும் பூஜைகளையடுத்து சிவத்திரு சிவசண்முகவடிவேல் தலைமையில் திருவாசக முற்றோதலும் இடம்பெறும். ஓ





அச்செழு மதுரை மீனாட்சி அம்மன் ஆலய உற்சவ காலங்களில் சிவலிங்க யோக கேந்திரா நிலையத்தினால் நடாத்தப்பட்ட சைவ சமய அறிவுப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவிக்கு பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட க.நிஜலிங்கம் பரிசில் சான்றிதழ் வழங்குவதையும், பரீட்சையில் வெற்றியீட்டிய மாணவர்கள் சான்றிதழ்களுடன் காணப்படுவதையும், அருகில் சிறப்புச் சொற்பொழிவாளர்கள் கந்தசத்தியதாசன். சி.சசீவன் ஆகியோர் நிற்பதையும் படங்களில் காணலாம்.

# யாழ். கல்வி வலய முன்பள்ளிகளின் கற்றல் கண்காட்சியும், கலைநிகழ்வும்

யாழ்ப்பாண வலய முன்பள்ளிகள் இணைந்து நடாத்திய கற்றல் கண்காட்சியும், கலைநிகழ்வும் அண்மையில் யாழ்.செங்குந்தா இந்துக்கல்லூரியில் மிகச் சிறப்பாக நடந்தேறியது. இரு நாட்கள் நடைபெற்ற இக் கண்காட்சி யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளரின் முன் முயற்சியில் முன்பள்ளிச் சமூகத்தினால் முன்னெடுக்கப்பட்டது.

இங்கு காட்சிப்படுத்தப்பட்டவை வெறுமனே பார்வைக்கு வைக்கப்படாமல் முன்பள்ளிச் சிறார்களிடம் விருத்தி செய்ய வேண்டிய கற்றல் தேர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டிருந்தமை இக் கண்காட்சியின் அர்த்தபுஷ்டியான நோக்கத்தினை நிறைவு செய்வதாக அமைந்திருந்தது. அந்த வகை யில், இதனை ஒழுங்கமைத்த முன்பள்ளி ஆசிரியர்கள், முன்பள்ளிச்சிறார்களின் ஆற்றல் வெளிப்பாடுகளுக்கு களமாகவும் இக் கண்காட்சி அமைந்ததெனலாம்.

முன்பள்ளிச் சிறார்களது அடிப்படைத் திறன்களை விருத்தி செய்யும் நோக்கில் காட்சியகங்கள் வேறு பிரித்து அமைக்கப்பட்டிருந்தமை பாலர் கல்விச் செயற்பாட்டின் உள்ளடக்கங்களை பார்வையாளரிடத்து இலகுவான முறையில் உணர்த்துவதாக இருந்தன.

ஆரம்பத்தில் முன்பள்ளிச் சிறார்களது அறிவாற்றல் விருத்தி செயற்பாட்டில் கணித எண்ணக்கரு விருத்திக்கான பகுதி அமைந்திருந்தது. இங்கு தேர்ச்சி மையக் கல்வியை வெளிப்படுத்தும் வகையில் உருக்கள், வடிவங்கள் எனப் பல காட்டுருக்கள் கவர்ச்சிகரமான முறையில் காட்சிப்படுத்தப்பட்டன.

மேலும் வரிசைப்படுத்தல், ஒழுங்குபடுத்தல், ஏறுவரிசைப்படுத்தல், தொடர்புபடுத்தல், அளவீடு, நாணயங்கள், சமச்சீர், கணித விளையாட்டு என்பவை பற்றிய கணிதம் சார்ந்த எண்ணக்கருக்களை முன்பள்ளிச் சிறார்களிடம் விருத்திசெய்யும் முறைமை, எண்கள் பற்றிய கையேடுகளின் பயன்பாடுகள் என்பவை பற்றி முன்பள்ளிச் சிறார்களுக்கு விளக்கமளிக்கப்பட்டமை சிறப்பான விடயமாகும்.

அடுத்த காட்சியகமாக மொழி விருத்தி தொடர்பில் சிறார்களிடம் விருத்தி செய்ய வேண்டிய கேட்டல்திறன், பேச்சுத்திறன், உச்சரிக்கும் திறன், ஆராயும் திறன், இனங்காணும் திறன் என்பவற்றின் அடிப்படையில் கற்றற் செயற்பாடுகளுக்கான காட்டுருக்கள், கதைகூறும் படங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. அத்துடன் மிருகங்கள், பறவைகளின் ஒலி வேறுபாடுகளை செவிமடுக்கவென பல்வேறு உத்திகளைப் பயன்படுத்தி காட்டுருக்கள் அமைக்கப்பட்டிருந்தமை சிறப்பான அம்சமாகும்.

இதனைத் தொடர்ந்து ஆக்கச் செயற்பாடுகள் பற்றிய காட்சியகம் அமைந்திருந்தது. இங்கு முன்பள்ளி சிறார்களது மனவெழுச்சி வெளிப்பாடுகளை முன்னிலைப்படுத்தும் வகையில் பல்வேறு ஆக்கங்கள் காட்சிப்படுத்தப்பட்டமை பாராட்டிற்குரியது. இவற்றுக்கு கழிவுப் பொருட்கள் மற்றும் இயற்கையிலிருந்து கிடைக்கும் பொருட்களைப் பயன் படுத்தியிருந்தமை கவனயீர்ப்புக்குரிய விடய மாகும்.

சிறார்களது ஆக்கச் செயற்பாட்டுக்கான ஊடகங்களாக சிரட்டை ,கயிறு, தென்னம் பாளை, சணல் நூல், கடதாசி என்பவற்றைப் பயன்படுத்தி அழகான பொருட்களை ஆக்க முடியும் என்ற இயலுமையை பார்வை யாளரிடத்தில் தூண்டக்கூடியவாறு காட்சிப்படுத்தப்பட்டமை இக்கண்காட்சியின் சிறப்பான இன்னொருஅம்சமாகும்.

அத்துடன் இங்கு வைக்கப்பட்டிருந்த கயிற்றிலான குதிரை, சணலில் செய்யப்பட்டிருந்த உருக்கள், சிரட்டையில் செய்யப்பட்டிருந்த நிறைகுடம்,குத்து விளக்கு, பாத்திரங்கள் என்பன பார்வையாளரது அழகியல் உணர்வுகளை தூண்டும் வகையில் அமைந்தன.

கண்காட்சியின் நான்காவது காட்சியகமாக அமைந்தது உடல் அபிவிருத்திப் பகுதியாகும். சிறார்களது தசைநார்கள் விருத்தியடைந்தால் உடலின் புலனுறுப்புக்களைக் கட்டுப்படுத்தி இயைபாக்கம் அடையலாம் . அதன்மூலம் கற்றற் செயற்பாடுகளுக்கு முன் சிறார்களது கண்,காது, கை,கால், விரல், நாக்குப் போன்ற உடல் உறுப்புக்களின் தசைநார்கள் விருத்தியடையவேண்டும் அப்போதுதான் பேச்சு, வாசிப்பு, எழுத்துப் போன்றமுறையான கற்றல் திறன்கள் விருத்தியடையும் என்பதற்கமைய கண்காட்சியின் போது சிறார்களுக்கான பல்வகை விளையாட்டு உபகரணங்கள், சிறுவர்பூங்கா விளையாட்டு முற்றம் என்பவற்றின் மாதிரிகளுடன் சிறார்களைக் கொண்டு தசைநார்ப் பயிற்சிக்கான விளையாட்டுக்கள். செயன்முறை விளக்கங்கள் அளிக்கப்பட்டமை பயனுள்ளதாக அமைந்தது.

இக் கண்காட்சியின் இறுதிப் பகுதியாக சூழலைப் புரிந்து கொள்ளல் என்ற முன்பள்ளிச் சிறார்களது விருத்திக்கான செயற்கூறுகள் ஒழுங்கமைவாக வடிவமைக்கப்பட்டிருந்ததன் இங்கு காட்சிப்படுத்தப்பட்டவை பிள்ளையின் சூழலிலுள்ள மனிதர்கள், விலங்குகள்,கட்டடங்கள், தாவரங்கள் என அனைத்துக் கூறுகளையும் உள்ளடக்கிய வகையில் அமைந்தமை சிறப்பான அம்சமாகும்.

அந்த வகையில் கிராமம்,நகரங்களின் மாதிரி உருக்கள், வீடுகளின் பரிணாம வளர்ச்சி, போக்குவரத்து சாதனங்களின் பரிணாம வளர்ச்சி, வழிபாட்டிடங்கள், நீர் நிலைகள், தாவரங்கள், மிருகங்கள், பறவைகள் எனப் பல்வேறு வகையான மாதிரி உருக்கள் காட்சிப்படுத்தப்பட்டமை முன்பள்ளிச் சிறார்கள் தமது சூழலையும் இயற்கையும் பற்றி அறிந்து கொள்ள உதவியதோடு நல்ல மனப்பாங்கினை வளர்க்கவும் இக் கண்காட்சி உதவியதெனலாம்.

இக் கண்காட்சியை மேலும் மெருகேற்றும் வகையில் இங்கு அளிக்கை செய்யப்பட்ட சிறார்களது அரங்க நிகழ்வுகள் பார்வையாளரிடத்து நல்ல வரவேற்பினைப் பெற்றன.

சிறார்களுக்கு அவசியமான ஆட்டம், பாட்டு,பேச்சு நடிப்பு,அபிநயம் எனப் பல்வேறு திறன்களின் வெளிப்பாடுகளுக்கு இங்கு களமமைத்துக் கொடுத்தமை பாராட்டப்பட வேண்டியதாகும்.

**திருமதி பி.விசாகினி**
முன்பள்ளி இணைப்பாளர்
யாழ்ப்பாண வலயம்.

முன்பள்ளிகளை உயிர்ப்புடன் பேணி வருகின்ற முன்பள்ளி ஆசிரியர்கள், இணைப்பாளர்களது செயற்திறன் வெளிப்பாடுகளுக்கான ஒரு நிகழ்வாகவும் இக் கண்காட்சி அமைந்தமை குறிப்பிடப்பட வேண்டிய விடயமாகும்.

அத்துடன், பெருமளவு மக்களும், சிறார்களும் பார்வையிட்டு பயனடைந்த இக் கண்காட்சியினை ஒழுங்கமைத்து, நெறிப்படுத்திய யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநயாகம் அவர்களும் கல்விச் சமூகத்தினரும் பெரிதும் பாராட்டப்பட வேண்டியவர் எனலாம்.

# நோத்முதல் கோபல்லவா வரை 85

சேர் முத்துக்குமாரசுவாமி அவர்கள்

அவர்கள் லோறன்ஸ், ஜோச்வால், தோம்சன் காப்பர், யேம்ஸ் டி அல்விஸ், யோன் ஈற்றன் என்பவராம். இவர்களுள் பின்னர் குறிப்பிட்ட யோன் ஈற்றன் முத்துக் குமாரசுவாமிக்குப் பதிலாகக் கடமையாற்றியவராவர்.

இந்த இக்கட்டான நிலைமை யில் என்ன செய்யலாமென பதில் ஆள்பதியான மேஜர் ஓபிறைன் கலங்கியபோது, இராணி அப்புக்காத்தாய றிச்சாட் மோகன் என்பார் ஆள்பதியிடம் உத்தியோகப்பற்றற்ற அங்கத்தவரின் விலகற் கடிதங்களைக் கவனிக்காது அவர்களை விட்டுச் சபையைக் கொண்டு நடத்துமாறு ஆலோசனை கூறினார்.

இங்ஙனம் விலகல் செய்த பெரியார்கள் *இலங்கைச் சீர்திருத்த சபை* என்றொரு சபையை ஆரம்பித்துக் குடியேற்ற நாட்டு மந்திரிக்குச் சீர்த்திருத்தங்கோரியும், வரவு செலவு கட்டுப்படுத்தப்படல் வேண்டுமெனவும் நினைவேடுகள் எழுதுவாராயினர்.

முத்துக்குமாரசுவாமி அவர்கள் இரண்டாம் முறை இங்கிலாந்துக்குப் போயிருந்த காலத்தில் ஆங்கிலேயர் அவரை வெகுவாக உபசரித்தனர்.

பெரிய மந்திரிகளின் தேநீர் விருந்துபசாரத்திலும் பிரசித்திபெற்ற விழாக் களிலும் அவர் கவர்ச்சிகரமாகப் பிரசன்ன மாயிருந்தார். அவரைப் பெரிய பெரிய இடங்கள் தங்கள் தங்கள் கொண்டாட்டங்க ளுக்கு அழைத்திருந்தனர்.

அவருடைய புருடத்துவம், திறமையான ஆங்கிலப்புலமை, எவரையும் வெகுவாகக் கவர்ந்ததால் ஆங்கிலப் பத்திரிகைகள் அவருடைய படங்களை அதிகமாகப் பிரசுரித்தன.

### மீள் பார்வை

முத்துக்குமாரசுவாமி அரிச்சந்திரன் நாடகத்தை ஆங்கிலத்திலே தயாரித்து மகாராணி முன்னிலையில் நடித்துச் சிறப்புப் பெற்றார். அவர் தம் நாடகத்தை கானவன் என்ற பிரபுவுக்குச் சமர்ப்பித்துப் புகழ்பெற்றார். கானவன் பிரபுவே அக்காலத்தில் குடியேற்ற மந்திரியாராயிருந்தார்.

முத்துக்குமாராசுவாமி அவர்களின் நல்லியல்புகளை நேரிலறிந்த மொங்ரன் மைல்ஸ் என்ற கவுரன் பிரபு அவரை வெகுவாக உபசரித்து அவருடன் கைகோர்த்துலாவி நண்பராயினர்.

அப்பிரபுவின் மைந்தராய குறூவ் அவர்களே அருணாசலம் அவர்கள் காலத்தில் குடியேற்ற மந்திரியாயிருந்து அன்னாருக்குப் பல உதவிகளைச் செய்து கொடுத்தார். அவற்றினடிப்படையிலேயே பிற்காலச் சட்டசபைத் திருத்தங்கள் ஏற்பட்டன.

முத்துக்குமாரசுவாமி அவர்கள் மாட்சிமை தங்கிய மகாராணியாரின் ஆங்கிலத்தை அட்சரம் பிசகாமல் அழகாகப் பேசியதைக் கேட்டு ஆங்கிலேயரே அதிசயித்தனர்.

அவருடைய தலைப்பாகை, உத்தரீயம் ஆகிய கீழைத்தேச உடையலங்காரத்தைக் கண்ட ஆங்கிலப் புலவர்கள் கவிபுனைந்து களித்தனர். அவற்றில் ஒன்று பின்வருமாறு,

His coat was like the snow drift
His pants of semilar hue;
His turban shone with diamonds,
And his girdle -it was blue.

பாமேஸ்வரன் பிரபுவும், டிசலறி என்ற பீக்கன்ஸ்பீல்ட் பிரபுவும் பிரித்தானிய பிரதம மந்திரிகளாய் இருந்தவர்கள். அவர்கள் இருவரும் முத்துக்குமாரசுவாமியின் ஆப்த நண்பர்களாயிருந்தனர்.

டிசலறி அவர்களின் தகவுரையினாலேயே விக்டோரியா மகாரா ணியார் முத்துக் குமாரசுவாமியைத் தமது அரண்மனைக்கு அழைத்து விருந்துபசாரஞ் செய்து நைற் பட்டமும் வழங்கினார் என்பர். பாமேஸ்வரன் பிரபுவின் நண்பனாய் முத்துக் குமாரசுவாமி இருந்தார் என்பதை லோறன்ஸ் அவர்கள் தமது விகடகவியில் பின்வருமாறு பாடியுள்ளார்.

Samy Coomarasamy
He doesn't care what harm is done
Samy Coomarasamy
He's a friend of Palmerston

இன்னும் டிசலறி அவர்கள் தாம் எழுதிய நவீனத்தில் குமாரசுவாமி அவர்களை ஒரு முக்கிய பாத்திரமாக அமைத்து எழுதிச் சிறப்பித்துள்ளமையை இலக்கிய விற்பன்னர் கள் இரசிக்கக் கூடியதாக இருக்கிறது.

முத்துக்குமாரசுவாமி அவர்கள் கென்ற் மாகாணத்தில் ஓர் உயர் குடும்பத்தைச் சேர்ந்த




எலிசபெத் கிளே பீபீ என்ற ஆங்கி லேயப் பெண்ணைத் திருமணஞ் செய்து ஓர் ஆண் குழந்தையைப் பெற்றார். அக் குழந்தைக்கு ஆனந்தக் கென்ரிஸ் குமார சுவாமி எனப் பெயரிட்டார். அக் குழந்தையே பிற்காலத்

**க.சி.குலரத்தினம்**

தில் கலாயோகி ஆனந்தக் குமார சுவாமி என அகில உலகமும் போற்ற அருங்கலை விநோதராய் வாழ்ந்து கலைத் தொண்டு செய்த பெரியாராவர்.

மைந்தர் ஆனந்தகுமாரசுவாமியவர்கள் லண்டனில் உள்ள வைக்கிளிவ் கல்லூரியிலும், சர்வகலாசாலையிலும் கல்விகற்று பெரிய பட்டங்கள் பரிசுகள் பெற்றார். அவர் தோறியனைட் என்னும் கனிப்பொருளில் ஆராய்ச்சி செய்து நிலநூற் புலவராய் கலாநிதிப் பட்டம் பெற்றார். அவர் தமது 23ஆம் ஆண்டுப் பராயத்தில் இத்தனை புகழுடன் இலங்கைக்கு வந்து இலங்கையைத் தமது தாய்நாடெனக் கருதி கனிப்பொருள் துறைத் திணைக்களத்தில் அதிகாரியாய் சிலகாலம் கடமையாற்றினார். (தொடரும்)



பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கியில் இடம்பெற்ற குதூகல சேமிப்புக் கணக்கு ஆரம்ப விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பருத்தித்துறை பிரதேச செயலர் ஆர்.வரதீஸ்வரன் வங்கி முகாமையாளர் எம்.பரமானந்தனால் மலர் மாலையணிவித்து வரவேற்கப்படுவதையும், சுவாமி சித்ரூபானந்தா மங்கல விளக்கேற்றி விழாவை ஆரம்பிப்பதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-பரு.நிருபர்)

# இருபதாம் நூற்றாண்டு 8

# ஈழத்தமிழ் இலக்கியம்



*நகைச்சுவை* - "ஆச்சியயணம் போகிறாள்" (1969) செங்கை ஆழியான்

"முற்றத்து ஒற்றைப்பனை" (1972) செங்கை ஆழியான்

*பேய்பற்றியது* - "கொத்தியின்காதல்" (1975) செங்கைஆழியான்.

*வரலாறு*- "நந்திக் கடல்" (1969) செங்கை ஆழியான்

"சித்திராபௌர்ணமி" (குறுநாவல்) செங்கை ஆழியான்

"பாசக்குரல்" (1963) செங்கை ஆழியான்

"வாள்முனை வாழ்வு" (1968) செங்கை ஆழியான்

"யாரிந்தவேடர்" (1965) க.தா.செல்வராசகோபால்

"கிரௌஞ்சப் பறவைகள்" (1975) வ.அ. இராசரத்தினம்

*மொழிபெயர்ப்பு* - "கிராமப்பிறழ்வு" (1964) ம.மு.உவைஸ்

"இணைபிரியாததோழர்" (1973) சரோஜினி அருணாசலம்

"நெஞ்சில் ஓர் இரகசியம்" (1976) தம்பிஐயா தேவதாஸ்

"நான் சாகமாட்டேன்" (குறுநாவல்) செ.கதிர்காமநாதன்

"அபலையின் கடிதம்" (குறுநாவல்) செ.கணேசலிங்கம்

"பழிக்குப்பழி" (1976) வி.பி.மரியாம் பிள்ளை

*குடும்பம்* - "உனக்காக கண்ணே" (1959) சி.சரவணபவன் (சிற்பி)

"சுடர்விளக்கு" (1965) ந.பாலேஸ்வரி

"ஒரேயொரு தெய்வம்" (1973) கே.எஸ்.சிவகுமாரன்

"கனவுகள் கலைந்தபோது" (1977) அ. பாலமனோகரன்

*மர்மம்* - "மர்மமாளிகை" (1973) அருள் செல்வநாயகம்

"கறுப்பு ராஜா" (1975) ரஜனி

"அவன் சுற்றவாளி" (1968) யாழ்ப்பாணம் தேவன்

*சிறுவர்*- "ஓடிப்போனவன்" (1968) க.நவசோதி

*விஞ்ஞானம்*- "அந்தரத்தீவு" (1963) க.ச.மகேசன்

பலநாவல்கள் இவ்வகையில் வெளிவந்துள்ளன. வகைமாதிரிக்குச் சில இங்கு எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

இருபதாம் நூற்றாண்டுக் காலப்பகுதியில் நாவல் இலக்கியத்தில் "பிரதேச நாவல்கள்" என்ற தனித்துவ பண்பையும் காணலாம். வன்னி, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருமலை எனப் பாகுபட்ட பிரதேசங்களின் இயற்கை வர்ணனைகளையும் சுற்றுப்புறச் சூழல்களையும் நாவலில் பதிவுசெய்கின்ற சிறப்பு நிலை ஒன்றும் தோன்றியுள்ளது. "நிலக்கிளி" என்னும் நாவல் இவ்வகையில் முன்னோடியாகக் காணப்படுகிறது. செங்கையாழியானின் "காட்டாறு" (1977) தொடர் வெளிவந்தது. "நிலக்கிளி" மண்ணோடியந்த வாழ்வின் இயல்பான உணர்வுகளை வெளிப்படுத்தியது. "காட்டாறு" கற்பழிக்கப்படும் கிராமியத்தின் சோகசித்திரமாக வெளிவந்தது. "வாடைக் காற்று" (1973) நெடுந்தீவுப் பிரதேசத்தை மீன்பிடிக் களத்தைக் காட்டுகிறது. "போடியார் மாப்பிள்ளை" (1976) "கமலினி" (1977) "சுமைகள்" போன்ற நாவல்களையும் வகைமாதிரியாகக் காட்டலாம்.

சமகால நாவல்கள் என்ற ஒரு பகுப்பையும் ஈழத்து நாவல் இலக்கிய வரலாற்றில் நோக்குவது நன்று. 1980 இலிருந்து இக் காலப்பகுதியைத் தொடக்கமாகக் கொள்ளலாம். இக்காலகட்டத்தில் ஏற்பட்ட அரசியல் சமூகமாற்றங்கள் இலக்கிய ஆக்கத்திலும் மாற்றங்களை ஏற்படுத்தின. தேசிய இனப் பிரச்சினைகள், இயக்கங்களின் போராட்டம் என்பன சில நாவல்களை வெளிவரச் செய்தன. செ.யோகநாதனின் "நியாயப் படுத்தப் பட்ட கொலை" தாமரைச்செல்வியின் "தாகம்" பொ.கருணாகரமூர்த்தியின் "தொடுவானம் தூரத்தில்" தெணியானின் "சிதைவுகள்" செங்கையாழியானின் "மரணங்கள் மலிந்த பூமி" என்பவற்றை எடுத்துக் காட்டாகக் கூறலாம். செ.யோகராசா இக்கால கட்டத்து எழுந்த நாவல்களை வருமாறு காட்டியுள்ளார். அவரது எடுத்துக்காட்டுகள்

அண்மைக்கால (யாழ்ப்பாண) மக்களின் வாழ்வு "போரே நீபோ" -செங்கையாழியான்

முற்பட்ட ஈழத்தமிழரது வாழ்வு "நேற்றிருந்தோம் அந்த வீட்டினிலே" -செ.யோகநாதன்

*புகலிடம்*- "சுயம்வரம்" - துரை

*போராட்டங்கள்*- "போருலா" - மலரவன்

*புகலிடத்தமிழரது வாழ்க்கை*- "வானம் வசப்படும்" -பொ.கருணாமூர்த்தி

"தேம்ஸ் நதிக்கரையில்" - இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்

*பெண்ணிலைவாதம்*- "தூவானம் கவனம்" - கோகிலா மகேந்திரன்

"தனியாக ஒருத்தி" செ.யோகநாதன்

*சாதிப்பிரச்சினை*- "அடிமைகள்", "கானல்", "கோவிந்தன்", "தண்ணீர்", "பஞ்சகோணங்கள்கள்" - கே.டானியல்

*சீதனப்பிரச்சினை*- "ஆண்கள் விற்பனைக்கு" -ந.பார்த்தீபன்

*பிரதேசம்*- "கனவுச்சிறை" - தேவகாந்தன்

"தில்லையாற்றங்கரை" -ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்

*முஸ்லீம் மக்கள் வாழ்க்கை*- "சாணைக் கூறை" -ஜுனதா ஷெரீப்

*வித்தியாசமான படைப்புக்கள்*- "ஓ அந்த அழகிய கிராமம்" -செங்கை ஆழியான்

"கிட்டி" - செ.யோகநாதன்

சமகால நாவல்களின் படைப்பாக்கத்தில் விவரப்பதிவு என்னும் போக்குக் காணப்படுகிறது. தேசிய இனப்பிரச்சினையும் புகலிட வாழ்வியல் அனுபவமும் இதனை முனைப்பாக்கியுள்ளன. இந்நிலை ஒரு புதிய செல்நெறியை ஈழத்துத்தமிழ் நாவல் இலக்கியத்திற்கு நல்கியுள்ளது. டானியலின் நாவல்கள் தலித் நாவல் வரலாற்றில் முன்னோடி நாவல்களாகச் சிறப்புப் பெற்றுள்ளன. ஈழத்துத் தமிழ் நாவல் பொருள் நிலையில் புதிய வளர்ச்சியைப் பெற்றுள்ளது. ஈழத்தவர் புலம்பெயர்

**-கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

வாழ்வும் நவீன தொழில்நுட்பமும் இதனை மேலும் வளர வாய்ப்பளிக்கும். பிரசுவாய்ப்பும் தற்போது நாவல்களின் தோற்றத்தை துரிதப்படுத்தியுள்ளது. எனினும் வணிக நோக்கு இன்னும் ஈழத்துத் தமிழ் நாவல்களில் செல்வாக்கைச் செலுத்தவில்லையென்பது குறிப்பிடத்தக்கது. மக்களின் பொதுவான சமூக அனுபவமே நாவலின் வளர்ச்சிக்கு அடிப்படையாக உள்ளது. பெண்களின் கல்வி வாய்ப்பும் விழிப்புணர்வும்வாசகர் கூட்டமும் நாவலின் வளர்ச்சியை மேலும் விரைவுபடுத்தும் (தொடரும்)

# இந்தியாவில் பொறியியல் கல்லூரிகளில் முன்னணி வகிக்கும் SONA COLLEGE OF TECHNOLOGY

**SONA COLLEGE OF TECHNOLOGY**
**A PERFECT PLACE -MORE THAN YOUR EXPECTATION.**

Sona college of technology ஆனது 10 வருடங்களில் ஒரு பிரமாண்டமான வளர்ச்சியை கண்ட ஒருபொறியியல் கல்லூரி ஆகும்.

***BE / BTech Degree(Full time 4 years)***


- Electronics and Communication Engineering (ECE)
- Computer Science and Engineering (CSE)
- Information Technology. (IT)
- Electrical and Electronics Engineering (EEE)
- Mechanical Engineering (ME)
- Civil Engineering (CE)
- Textile Technology (Fashion Technology)

***PG Programmes (Full time 2 years)***

- MBA-Master of business Administration
- MCA-Master of Computer Applications

***ME Degree (Full time 2 years)***

- Computer integrated manufacturing (CIM)
- Computer Science and Engineering (CSE)
- Thermal Engineering (TE)
- Power System Engineering (PSE)
- Engineering Design (ED)
- Product Design of Development (POD)
- Power Electronics & Drives (PED)




- Computer & Communication (CC)
- Communication Systems (CS)
- Software Engineering (SE)
- VLSI Design (VLSID)

***Ph. D Programmes***

- Chemistry
- Mechanical Engineering

ஆகிய பட்டங்களை வழங்குகின்றது.

அண்ணா பல்கலைக்கழகத்தோடு இணைக்கப்பட்ட (Affiliation) இக்கல்லூரியானது கல்வியை வழங்கினாலும் பரீட்சைகள், பட்டம் உட்பட அனைத்து அம்சங்களும் அண்ணா பல்கலைக்கழகத்தினது நேரடி நெறியாள்கையின் கீழ் அமைந்துள்ளது.

Sona College of Technology ஆனது அண்ணா பல்கலைக்கழகத்தில் இணைக்கப்பட்ட ஏறத்தாழ 300 பொறியியல் கல்லூரிகளில் முதல் 5 இடத்தினுள் உள்ளமை குறிப்பிடத்தக்கது. மேலும் இறுதித் தரப்படுத்தலின் படி இந்தியாவில் உள்ள 2000க்கும் மேற்பட்ட தனியார் பொயிறியல் கல்லூரிகளில் 27ஆவது இடத்தை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அண்ணா பல்கலைக்கழகத்தின் இணைக் கல்லூரிகளில் கற்கும் மாணவர்களுக்கு அண்ணா பல்கலைக்கழகமே நேரடியாக பட்டங்களை வழங்குகின்றது. இவை உலகளவில் அங்கீகரிக்கப்பட்டவையும் எல்லா நாடுகளிலும் ஏற்றுக்கொள்ளப்பட்டவையும் ஆகும். மேலும் இதைப்பெற்ற இலங்கை மாணவர்கள் பலர் இங்குள்ள பொறியியல் பட்டதாரிகளுக்கு இணையாக இலங்கையில் பல்வேறு துறைகளில் பதவி வகிப்பது குறிப்பிடத்தக்கது.

Sona வானது மேலும் பல சிறப்பம்சங்களை தன்னகத்தே கொண்டுள்ளது.

1) AICTE அங்கீகாரம்

2) AICTE (All India Council for Technical Education )இனது கடல் கடந்த (Overseas) மாணவர்கள் அனுமதிப்பதற்கான சிறப்பு அங்கீகாரம் தமிழ் நாட்டில் அதுவும் அண்ணா பல்கலைக்கழகத்தில் இணைக்கப்பட்டுள்ள பொறியியல் கல்லூரிகளில் நான்கு மட்டுமே இந்த அங்கீகாரத்தை பெற்றுள்ளன.

**இதன் நன்மைகளாவன:-**


1. மாணவர்கள் Foreign Nationals ஆக ஏற்றுக் கொள்ளப்படுவர்.
2. நாடுதிரும்பியதும் எவ்வித பரீசீலனைகளும் இன்றி உடனடி அங்கீகாரத்துடனான வேலை வாய்ப்பு.
3. வெளிநாடுகளில உயாகலவிககு (MSC, MBA) செல்லுமிடத்து போதிய அனுசரணை கிட்டும்.

**இந்த ஆண்டு A/Lஎடுத்த மாணவர்களுக்கு ஒரு அரிய வாய்ப்பு**

அதாவது 2008 A/L இல் கணித துறையில் பரீட்சை எழுதி முடித்திருக்கும் மாணவர்கள் தாம் நல்ல Results எடுப்பார்கள் என்று நம்பும் பட்சத்தில் Pending Results உடன் உடனடியாக V4 EDUCAT IONAL CONSULTANTS ஆகிய எம்மூடாக இக்கல்லூரியில் சேர்வதன் ஊடாக உடனடியாகவே தமது பொறியியல் கல்வியை தொடரலாம். இதன் மூலம் கால விரயத்தினை முற்றிலுமாக தவிர்த்துக்கொள்ளலாம்.

08 September 15ஆம் திகதி கல்லூரியில் சேரும் ஓர் மாணவன் /மாணவி 2012 April மாதத்தில் தனது 04 வருட பொறியியல் பட்டப்படிப்பை சிறப்பாகவும் குறைந்த செலவிலும் முடிக்கும் அரிய வாய்ப்பானது எம்மூடாக மட்டுமே சாத்தியமாகின்றது. கல்வியாண்டு ஆனது 4 வருடங்களாக கணிக்கப்பட்னும் உண்மைக் காலம் 3 3/4வருடங்கள்மட்டுமே. ஆனால் இலங்கையில் ஒரு பொறியியல் கல்வியை முடிக்க 5 வருடங்களுக்கும் அதிகமாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் நன்றாக படிக்கும் மாணவன் / மாணவி ஒருவர் First class degree எடுப்பது என்பது படிக்கும் எம் மாணவர்கள் அனைவருக்கும் சாதாரண ஒன்றே ! இதன் பலனானது அவரின் எதிர் காலத்தில் எல்லா இடங்களிலும் பிரதிபலிக்கும்.




உதாரணமாக ஐரோப்பியா, கனடா, USA,Australia போன்ற நாடுகளில் Msc இனை தொடர விரும்பும் மாணவர்கள் 100% புலமைப்பரிசில்கள்பெற வேண்டும் எனின் அவர்களுக்கு 1st Class degree அவசியம். இலங்கையில் உள்ள பல்கலைக் கழகங்களுடன் ஒப்பிடும் போது Anna University இல் இருந்து 1st Class எடுப்பது இலகுவானதொன்றாகும். இந்த வாய்ப்பினை கடந்த காலங்களில் அண்ணா பல்கலைக்கழக Degree பெற்ற மாணவர்கள் மிகச் சரியாக பயன்படுத்தியுள்ளார்கள்.

எடுத்துக்காட்டாக:- தற்போது 2008 இல் Pending Results உடன் எம்மூடாக Sona college இல் இணையும் எவர் ஒருவர் 2012 April இல் அவரது Degree ஐ பூர்த்தி செய்து உடனடியாகவே 2012 September இல்மேலைத்தேய நாடுகளில் Msc இனை தொடரக்கூடியதாக இருக்கும் என்பது நிச்சயமாகும். மேலும் 2012 இல் Degree ஐ முடிக்கும் மாணவர் வேலை செய்ய விரும்பும் பட்சத்தில் உடனடியாகவே இலங்கைக்கு திரும்பி இங்குள்ள மற்றைய பொறியியல் மாணவர்களைப் போல் அனைத்து வேலை வாய்ப்புக்களையும் பயன்படுத்திக்கொள்ளலாம்.

A/L மற்றும் Lodon A/Lஇல் மிகக் குறைந்த புள்ளிகளின் வித்தியாசத்தில் பொறியியல் பீடங்களை தவறவிட்ட மாணவர்கள் , 3 தடவையும் பரீட்சை எழுதி பரீட்சையில் சித்தியடைந்தும் பல்கலைக்கழகங்களில் அனுமதியை பெறாதவர்களும் இந்த அரிய வாய்ப்பினை எம்மூடாக பயன்படுத்திக் கொள்ளலாம்.

மேலும் மூன்று பாடங்களிலும் திறமைச் சித்தி (C) அடைந்த மாணவர்களுக்கு V4 Educational Consultancy (Pvt) limited ஆகிய நாங்கள் Sona college உடன் மேற்கொண்ட ஒப்பந்த அடிப்படையில் புலமைப் பரிசில்களை பெற்றுக் கொடுக்கின்றோம் . இது இக்கல்வியாண்டில் எம்மூடாக இணைபவர்களுக்கு மட்டுமே பொருந்தும். மேலும் குறிப்பிட்ட ஒரு மாணவர் Pending Results அடிப்படையில் எமது கல்லூரியில் இணைந்து கல்வியை தொடரும் பட்சத்தில் அவரது A/L பெறுபேறுகளில் போதிய சித்தியடையாதிருப்பின் 100% ஆன கல்விக் கட்டணம் மீளளிக்கப்படும்.

மேலும் மாணவர் வேண்டிக் கொள்ளும் பட்சத்தில் அவர் கல்விக்கட்டணத்தை பகுதிகளாக பிரித்து கட்டுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும். அவை Bank இனூடாக DD எடுத்துச் செல்வதற்கான ஒழுங்குகள் எம்மால் மேற்கொள்ளப்படும்.

தற்போது Sona இல் 19 இலங்கை மாணவர்கள் தங்கள் கல்வியை சிறப்புற தொடர்ந்து கொண்டிருக்கின்றனர். இவர்கள் படிப்போடு மட்டும் அல்லாது கல்லூரியின் அனைத்து துறைகளிலும் தமது திறமைகளை வெளிப்படுத்தி அதற்குரிய புலமைப்பரிசில்களையும் பெற்று வருகின்றனர்.

Sona இல் உள்ள பல்துறைசார் வசதிகளை வகைப்படுத்தினால் இங்குள்ள ஆய்வு கூட வசதிகள் சர்வதேச தரத்துடன் விளங்குவதுடன் மாணவர்களுக்கு அவற்றின் உச்சப் பயன்பாடு கிட்டும் வகையிலும் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

☞ இங்கு மாணவர்கள் கல்வியில் பின்தங்கும் நிலையில் இருப்பின் அவர்கள் இனங்காணப்பட்டு மேலதிக க்வனம் எடுக்கப்படுகிறது.

☞ விரிவுரையாளர்கள் மாணவர்களுக்கான விகிதம் 1:12 ஆகையால் அவர்களுக்கும் மாணவர்களுக்கும் இடையிலான புரிந்துணர்வு அதிகமாவதுடன் நட்பு ரீதியான கல்வியூட்டல் Sona வின் வெற்றிக்கு வழிகோலுகின்றது என்றால் மிகையாகாது. இதற்கு உதாரணமாக யாழ். மாவட்டத்தில் இருந்து கடந்த வருடத்தில் 2007 A/L Pending Result உடன் எம்மூடாக மாணவி ஒருவர் இன்று English medium இல் மிகவும் மெச்சத்தக்க பெறுபேறுகளுடன் இரண்டாவது வருடத்தில் கல்வியை தொடர்ந்து கொண்டிருப்பதனை கூறலாம்.

## அறிவுக்கலசம்
### ஆர்.யூ.பாலமுருகன்

☞ Hostel ஆனது ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனியாக அமைக்கப்பட்டிருப்பதுடன் நல்ல சுகாதாரத்துடனும் அனைத்து வசதிகளுடனும் பராமரிக்கப்பட்டு வருகின்றது. மேலும் மாணவர்களுடன் செல்லும் பெற்றோர் அவர்களுடன் சில நாட்கள் கழிப்பதற்காக அனைத்து வசதிகளுடனும் கூடிய Guest house Sona இனால் கல்லூரி வளாகத்தினுள்ளேயே அமைக்கப்பட்டிருப்பது சிறப்பம்சம் ஆகும்.

☞ நூலகமானது 45000 க்கும் மேற்பட்ட நூல்கள் 300 சஞ்சிகைகள் உடனும் இலத்திரனியல் நூலகமானது 2000 CD Rom மற்றும் 1000க்கும்மேற்பட்ட Video lectures உடனும் அமையப்பெற்றுள்ளது.

☞ 1400 க்கும் மேற்பட்ட Computer இனை 2 Mbps Speed Internet Connection உடன் கூடிய 13 Computer labs என்பன மாணவர்களின் உபயோகத்திற்குகென வழங்கப்பட்டுள்ளன.

☞ English , German, French, Spanish ஆகிய மொழிகளுக்கென பிரத்தியேகமான Language labs

☞ விளையாட்டுத்துறையை பொறுத்தளவில் Cricket, football , Ball batminton, Volley ball, Shuttle, Tennis மற்றும் Basket ball என்பவற்றிற்கு பிரத்தியேகமான மைதானங்கள் விளையாட்டு அரங்குகள் Swimming Pool, Gymnasium மற்றும் யோகாசன வகுப்புக்களும் மேலதிகமாக பொழுதுபோக்கு அம்சங்களும் இடம்பெறுகின்றன.

அண்ணா பல்கலைக்கழகத்துடன் ஏறத்தாழ 300 பொறியியல் கல்லூரிகள் உள்ளன. அவற்றுக்கு இடையேயான பல்வேறு கல்வி விளையாட்டு மற்றும் அறிவியல் சார் போட்டிகளில் எமது மாணவர்கள் கலந்துகொள்வதன் மூலம் தமது ஆளுமையை விருத்தி செய்து கொள்ள முடிகின்றது.மேலும் அண்ணா பல்கலைக்கழகத்தின் சட்டங்களின் பிரகாரம் Sona கல்லூரியில்பகிடிவதை (Ragging) அறவே தடைசெய்யப் பட்டுள்ளது.

(07ஆம்பக்கம் பார்க்க)

**2008ல் A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களே!**
**காலத்தை விரயமாக்காதீர்... எம்முடன் இணைந்து கொள்ளுங்கள்...**
எங்குமில்லாத ஓர் அரிய சந்தர்ப்பம்
2008 A/L பரீட்சை எழுதிய மாணவர்கள் **Pending result** அடிப்படையில் சேர்க்கப்படுவார்கள்.
சித்தி பெறத் தவறும் பட்சத்தில் 100% கல்வி கட்டணம் மீளளிக்கப்படும்.

**2012 MAYல் நீங்களும் ஒரு பொறியியலாளர்**
August 28ல் பாடசாலையில் இருந்து விலகும் நீங்கள் இரண்டு வாரத்திலேயே உங்கள் பட்டப்படிப்பை ஆரம்பியுங்கள்.
சொற்ப அளவிலேயே அனுமதிகள் உள்ளதால் எம்மை விரைவாக அணுகுபவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

DONT MISS THIS GREAT OPPORTUNITY

Courses Offered:
Bachelor of Engineering (BE)
- Electronics & Communication Engineering
- Information Technology
- Electrical & Electronics Engineering - 4Year
- Computer science & Engineering
(Normal tution fees Rs(Ind)1.2 Lakh/Yr, Scholarship Rs(Ind) 0.2Lakh/Yr)
- Civil Engineering
- Mechanical Engineering
- Fashion Technology
(Normal tution fees Rs(Ind)1 Lakh/Yr, Scholarship Rs(Ind) 0.1Lakh/Yr)

No Sponsor ship
Bank balance
Consultation Charges
No Ragging

Missed the E-facuty! Leave the worries!
SONA - A Perfect place, more than your expectation!
**Direct admissions from Sona College**

SONA College is rank 27th among more than 2000 Engineering Colleges in INDIA
Sona college rank 5th under the Anna University

LONDON A/L STUDENTS ALSO CAN APPLY

Just make a call at any time to reach us

V4 EDUCATIONAL CONSULTANCY PRIVATE LIMITED

SONA COLLEGE OF TECHNOLOGY
Sona Nagar, Salem - 636005, Tamilnaadu, India
APPROVED BY AICTE, AFFILIATED TO ANNA UNIVERSITY & ISO CERTIFIED

Director-International Admissions, Sona College of Technology, Salem-636005.Tamilnadu,INDIA

நேரடித் தொடர்பு:-

Mr.S.Jeyakanth -TP.0773867257, 0774366711 Mr.T.Elankeethan -TP.0212228374, 0775936343. Email - mail@v4edu.info

# சமநிலையான வாழ்க்கை வாழ வழிகாட்டும் —நூல் அலுவலக முகாமைத்துவம்—

## மதிப்பீடு
### சிரேஷ்டவிரிவுரையாளர் இ.விஜயகுமாரன்

இன்று நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் உலகம் தகவல் தொழில் நுட்பத்தில் சிக்கித் தவிக்கின்றது. அரச நிறுவனங்களிலும் தனியார் நிறுவனங்களிலும் வேலை செய்யும் அதிகாரிகள் அதிகளவு மாற்றங்களையும் போட்டிகளையும் கொண்ட சூழலில் பெறப்படும் அதிகளவான தகவல்களை செயல் முறைப்படுத்தி தீர்மானங்களை எடுக்க வேண்டிய நிலையில் உள்ளனர்.




இந்நிலையில் நிறுவனங்களில் உள்ள அதிகாரிகளும் , உத்தியோகத்தர்களும் அலுவலக நடைமுறைகளிலும் முகாமை நுட்பங்களையும் நன்கு விளங்கிக்கொண்டு வினைத்திறமையுடன் செயற்படுவதன் ஊடாக அலுவலகப்பணிகளை அன்றாடம் முழுமையாக நிறைவு செய்து மக்களுக்கு சிறந்த சேவையை வழங்குவதுடன் தமது நேரத்தையும் மீதப்படுத்த் முடியும்.

இதன்ால் தமது குடும்ப அங்கத்தவர்களுடன் மகிழ்ச்சியாக நேரத்தை கழிக்க முடியும்.

வேலைச்சுமை குடும்பம் என்பவற்றுக்கிடையே ஒரு சமநிலையை பேணி மகிழ்ச்சியான ஓர் சமநிலை வாழ்க்கையை (Balanced Life) வாழ இராசநாயகம் தம்பதியினரால் எழுதப்பட்ட அலுவலக முகாமைத்துவம் என்னும் நூல் உதவும் என நூல் மதிப்பீட்டு உரையை நிகழ்த்திய யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிகப் பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் இரத்தினம் விஜய குமாரன் குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிடுகையில் நாம் உடலுக்கு எவ்வாறு மூன்று வேளையும் சத்தான உணவு கொடுத்து சோர்வின்றி பேணுகின்றோமோ அதேபோன்று எமது மனதும் சோர்வின்றி உற்சாகமாக வேலை செய்வதற்கு வேண்டிய ஊட்டச்சத்தை வழங்கும் நல்ல நூல்களை அலுவலக வேலை நேரத்தில் ஓய்வு கிடைக்கும் போது வாசிக்க வேண்டும். உத்தியோகத்தர்கள் தமது அலுவல்க முகாமைத்துவம் சம்பந்தமாகவும் சுயமுகாமைத்துவம் சம்பந்தமாகவும் வழிகாட்டும் நூல்களை தவறாது வாசிப்பதன் ஊடாக மனதின் சோர்வினை தவிர்த்து மனதின் சக்தியை முழுமையாக பயன்படுத்தி உற்சாகமாக வேலை செய்ய முடியும்.

இராசநாயகம் அவர்கள் கணக்கியல் நிர்வாகியாக பல்வேறு பட்ட அரச நிறுவனங்களின் பெற்ற அனுபவத்தினையும், கலாநிதி திருமதி ஜெயலட்சுமி இராசயநாயகம் அவர்கள் கல்வித்துறையில் இருந்து கொண்டு பாடசாலை நிர்வாகம், பல்கலைக்கழகம் நிர்வாகம் போன்றவற்றிலிருந்து பெற்ற பட்டறிவினையும் கொண்டு இரு வேறு பட்ட பரிமாணங்களில் பெற்ற அனுபவங்களை இணைத்து இன் நூல் எழுதப்பட்டது.

ஓர் அலுவலகத்தில் எவ்வாறு பதிவேடுகள், கோப்புகள்(files) முறையாக பேணப்படவேண்டும் என்பதிலிருந்து கூட்டங்கள் நடாத்துதல் அறிக்கைகள் எழுதுதல் கழகத் தொடர்புகளை பேணுதல் போன்ற சகல அலுவலக நடைமுறைகளுடன் அலுவலக முகாமைத்துவ நுட்பங்களையும் தெளிவாக இலகுவான தமிழ் நடையிலேயே இந்நூல் விளக்குகின்றது.

நிறுவனங்களில் வேலை செய்வோர் தமது வேலைச்சுமைகளுக்கு மத்தியிலும் தமது மனதை ஒருநிலைப்படுத்தி இந்த விடயங்களை கற்பதில் உள்ள கஷ்டங்களை கருத்தில் கொண்டு முதலில் கேள்விகளை கேட்டு நூலை வசிப்பவர்களை விழிப்படையச்செய்து பின்னர் அலுவலக முகாமை நடைமுறைகளை பொருத்தமான தலைப்புக்களின் கீழ் தொகுத்து இலகுவாக விளங்கப்படுத்தும் பாங்கு சிறப்பாக அமைந்துள்ளது.

இந்நூல் அரச உத்தியோகர்த்தர்களின் வினைத்திறன் காண் பரீட்சையில் சித்தியடைவதற்கும் ஓர் சிறந்த வழிகாட்டியாகும்.

*

## யூரோ நாணயங்கள் கடத்தியவர் சுங்க அதிகாரிகளினால் கைது

(கொழும்பு)

1 கோடி 80 இலட்சம் யூரோ நாணயங்களை இலங்கைக்கு கடத்தி வந்த ஒருவரை சுங்க அதிகாரிகள் கைது செய்துள்ளனர் நேற்று முன்தினம் மாலை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த இந்தியப் பிரஜை ஒருவர் மீண்டும் சிங்கப்பூர் செல்ல முனைந்த பொழுதே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர்தனது காலுடன் இந்த நாணயங்களை கட்டிய நிலையில் கடத்தி வந்த பொழுதே கைது செய்யப்பட்டுள்ளார்இவரின் நடமாட்டத்தில் சந்தேகம் கொண்ட சுங்க அதிகாரிகள் இவரை சோதனையிட்ட பொழுதே இந்த் வெளி நாட்டு நாணயங்களை கைப்பற்றியுள்ளனர். ஓ

## ஐ.தே.க உறுப்பினர்கள் சிலர் கட்சி மாற திட்டம்

(கொழும்பு)

அண்மையில் நடைபெற்று முடிந்த மாகாண சபைத் தேர்தல்களை தொடர்ந்து மேலும் சில ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் அரசாங்கத்திற்கு செல்ல திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் குறித்த பாராளுமன்ற உறுப்பினர்கள் பதவிகள் வழங்குவதில் ஏற்பட்டுள்ள சிக்கல் காரணமாக அரசாங்கத்திற்கு செல்லும் நடவடிக்கை காலதாமதமாகும் என குறிப்பிடப்படுகிறது.

ஐக்கிய தேசியக்கட்சியிலிருந்து ஏற்கனவே விலகிச்சென்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் 18 பேருக்கும் எதிர்வரும் தேர்தல்களின் போது உரிய பாதுகாப்பு வழங்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு காணப்படுவதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

எனினும் இந்த நிலைமை சில நேரங்களில் அரசாங்கத்தில் உட் கட்சி பூசலை ஏற்படுத்தக்கூடும் என தெரிவிக்கப்படுகிறது. ஓ

## இந்தியாவில் பொறியியல்...

6ஆம் பக்கத்தொடர்ச்சி....

இது மிகவும் போற்றத்தக்க ஒன் றாகும். மேலும் Sattelite ஊடான விரிவுரை களை Sona Collegeஇல் உள்ள மாணவர்கள் பெற்று பயனடைய முடியும்.

உலகளாவிய ரீதியிலான பல்வேறு அமைப்புகளுடன் Sona ஆனது ஒப்பந்தம் செய்து கொண்டு அவற்றின் அங்கத்துவத்தினை பெறும் அரிய வாய்ப்பினை எமது மாணவர்களுக்கு வழங்குகின்றது.

உதாரணம்:- IEEE (Institute of Electrical and Elecrtronics Engineering)

இனது அங்கத்துவத்தினை பெற்றுக்கொள்ளும் அரிய வாய்ப்பு.

Sona College of Technology ஆனது Salem City இனுள் அமைந்திருப்பது ஒரு சிறப்பம்சம் ஆகும். அதாவது என்ன தேவைகள் ஏற்படினும் உடனடியாகவே நிறைவேற்றிக்கொள்ளும் வாய்ப்புள்ளது.

சேலம் நகரானது மிகவும் அமைதியான சூழலும் நல்ல ஆரோக்கியமான கால நிலையையும் கொண்ட மலைகளை அருகில் கொண்ட கலாசாரம் மிக்க ஒரு நகரமாகும். இதன் நடுவில் பஸ் நிலையத்திற்கும் ரெயில்வே நிலையத்திற்கும் இடையில் Sona College அமைந்திருப்பது மிகவும் வசதியான ஒன்றாகும். இங்கு 24 மணி நேரமும் போக்குவரத்து வசதிகள் உண்டு. அத்துடன் பூரண பாதுகாப்பான ஒரு இடமாக இதை சொல்லலாம்.

சேலம் நகரானது கோயம் புத்தூரில் இருந்து 2 மணி நேரத்திலும் திருச்சியில் இருந்து 4 மணி நேரத்திலும் சென்னை, பெங்களூர் என்பவற்றில் இருந்து 5 மணி நேரத்தில் அடையக் கூடிய ஒரு இடமாக விளங்குகின்றது.

இலங்கையில் இருந்து செல்லும் மாணவர்களுக்கான பிரயாண ஏற்பாடுகளையும் அனைத்து வசதிகளையும் V4 educational consultancy (Pvt) limited ஆகிய நாங்கள் பெற்றோரின் விருப்பத்தின் பேரில் ஒழுங்கு படுத்திக் கொடுக்கின்றோம். இது மாணவ மாணவிகளின் பாதுகாப்பான பயணத்தை கருத்திற் கொண்டு Sona college இனது வேண்டு கோளிற்கிணங்க எம்மால் மேற்கொள்ளப்படும் ஒரு சேவையாகும்.

இறுதியாக எம்மைப்பற்றி சில வரிகள்...

எமது நிறுவனம் V4 Educational Consultancy (Pvt) limited) ஆனது அரச அங்கீகாரம் பெற்ற ஒரு சேவையாகும். இது இரண்டாவது ஆண்டாக Sona College க்கு இலங்கையில் இருந்து மாணவர்களை தெரிவு செய்யும் சேவையினை வழங்கி வருகின்றோம்.

மிகவும் சிக்கனமான செலவில் தரம் நிறைந்த கல்வியை எமது மாணவர்கள் பெற வேண்டும் என்ற உயரிய நோக்கில் ஆற்றப் படும் இச் சேவையில் மாணவர்களிடம் இருந்து எதுவிதமான கட்டணமும் எம்மால் அறவிடப் படுவதில்லை என்பதும் அவர்கள் தொடர்ந்து 4 வருடங்கள் இந்தியாவிலேயே தங்கிப்படிப் பதற்காக ஒரேயடியாக 4 வருடத்திற்கான Visa இனை பெற்றுக்கொள்வதற்காக Sona college இடம் இருந்து இந்திய தூதரகத்திற்கு முகவரியிடப்பட்ட வேண்டுகோள் பத்திரத்தினை பெற்றுக் கொடுப்பதில் கவனம் எடுக்கின்றோம்.

மேலும் எம்மில் பலருக்கு இன்றும் இந்திய கல்வித்திட்டம் பற்றிய பல்வேறு சந்தேகங்கள் உண்டு. உண்மையில் உலகின் பல்வேறு துறைகளில் உயர்ந்த பதவிகளை வகிப்பவர்கள் இந்தியர்களே ! 20 வருடத்திற்கு முன்னர் இருந்த கல்வியின் தரத்திற்கும் இப்போது இருக்கும் கல்வியின் தரத்திற்கும் நிறையவே வேறுபாடு உண்டு .வளர்ந்து வரும் நாடுகளின் பட்டியலில் அதிரடியாக முன்னணியில் இருக்கும் இந்தியாவில் கல்விமுறையும் அதன்வளர்ச்சியை மென்மேலும் உயர்த்தும் முகமாகவே அமைக்கப்பட்டுள்ளதுடன் ஆண்டு தோறும் புதிய மாறுதல்கள் புகுத்தப்பட்டு எப்போதும் நடப்பு உலகிற்கு ஏற்றவகையில் அமைக்கப் பட்டு உள்ளன. மேலும் உலகில் எங்கெல்லாம் மொறட்டுவ, பேராதனை பல்கலைக் கழகத்திற்கு அங்கீகாரம் இருக்கின்றனவோ ! அதையும் விட அதிகமாக அண்ணா பல்கலைக்கழகத்திற்கு அங்கீகாரமும் புகழும் இருக்கின்றமை வெளிப்படையான ஒன்றாகும். இது போன்ற அரிய சந்தர்ப்பத்தில் எம்மூடாக எமது மாணவர்கள் அனுமதி பெறுவதையிட்டு மிகுந்த உவகையும் திருப்தியும் அடைகின்றோம்.

V4 Educational consultancy (pvt) Limited,
No: 7, 1/1,W.A. SILVA MAWATHA,
WELL AWATTE,
COLOMBO-06
email:- mail@v4edu. info
T.P:-077 3867257,077 366711,
077 5936343, 021-222-8374

## மத்திய மாகாண பொலிஸ் நிலையங்களில் பயங்கரவாத தடுப்புப்பிரிவுகளை அமைக்கத் திட்டம்

(கொழும்பு)

மத்திய மாகாணத்தின் சகல பொலிஸ் நிலையங்களிலும் பயங்கரவாத தடுப்புப் பிரிவுகளை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அண்மைக்காலமாக தமிழீழ விடுதலைப்புலிகளின் பல செயற்பாடுகள் மத்திய மலைநாட்டை மையமாக வைத்து மேற் கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப் படுகிறது.

இதன் படி மத்திய மாகாணத்தின் 52 பொலிஸ் நிலையங்களில் பயங்கரவாத தடுப் புப் பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. கடந்த 27ஆம் திகதி முதல் மத்திய மாகாண பொலிஸ் நிலையங்களில் இந்த பயங்கரவாத தடுப்புப் பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த பிரிவுகளினால் மேற்கொண்ட நடவடிக்கைகளின் மூலம் பல்வேறு தீவிரவாத செயற்பாடுகள் அம்பலமாகியுள்ளதாக மத்திய மாகாணத்திற்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர் காமினி நவரத்தின தெரிவித்துள்ளார். ஓ

## தமிழ்மக்களுக்கு தீர்வு கிடைக்கும் வரை விடுதலைப்புலிகளை அழிக்க முடியாது

### இ.தொ.கா.பேச்சாளர் யோகராஜன் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கைத் தமிழர்கள் ஒடுக்கு முறைக்கு உட்படுத்தப்படுவதாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் பேச்சாளரான ஆர் .யோகராஜன் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இலங்கையில் வடக்கு கிழக்கு மக்களின் துயரங்களுக்கு உரிய தீர்வு கிடைக்கும் வரையில் தமிழீழ விடுதலைப் புலிகளை அழிக்க முடியாது என்றும்அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் இனப் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டுமானால் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படவேண்டும்எனஅவர்வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையில் ஆங்கில செய்தித்தாள் ஒன்றிற்கு அவர் வழங்கியுள்ள செவ்வியில் இந்தக் கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

பெல்ஜியத்தில் இருப்பதைப் போன்று சமூகங்களுக்கான நாடாளுமன்ற முறையை இலங்கையில் அறிமுகப்படுத்தும் திட்டத்தை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் இனப் பிரச்சினைத் தீர்வுக்கான அனைத்துக் கட்சிக் குழுக் கூட்டத்தில் முன்வைத்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை சமுர்த்தி உட்பட்ட பொது வேலைத் திட்டங்களிலும் கூட தமிழர்களைச் சிங்களவர்கள் கருத்தில் கொள்வது இல்லை என்பதன் காரணமாகஇவ்வாறான சமூக நாடாளு மன்றங்கள் அவசியமென அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் இதற்காக எல்லைப் பிரிப்புத் திட்டங்கள் அவசியமில்லையென்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையில் நடைமுறையில் உள்ள பாதுகாப்பு முறையின் கீழ் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் துறைமுக அதிகார சபை ஆகியவற்றிற்கு தமிழப் பணியார்கள் பணிகளுக்காக சேர்க்கப்படுவதில்லை இது இன ரீதியாக தமிழர்கள் புறக்கணிக்கப் படுகின்றமையையே சுட்டி நிற்பதாகவும் யோகராஜன் தெரிவித்தார்.

இதற்கு மத்தியில் மலையக மக்களின் உரிமைகளை அரசாங்கத்துடன் இணைந்து கொண்டே வெல்ல முடியும் என்பதற்காகவே அதனுடன் இணைந்து செயற்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். ஓ

# மகான்களின் ஆசி பெற்ற தெல்லியூர் துர்க்காதேவி ஆலயம்

## இன்று துர்க்கை அம்மன் கொடியேற்றம்

*எங்கு தர்மமுள்ளதோ அங்கு தான் வெற்றி* என்பது மகாபாரதக் கதை தர்மத்திலிருந்தே பொருள், இன்பம் ஆகிய அனைத்தும் விளைகின்றன.

நம் நாட்டில் இத் தர்மத்தைப் போற்றி திருக்கோயில் கடமைகளை உள்ளத்தில் இருத்தி அறம் பண்ணியாற்றுவோர் ஒரு சிலர் இருப்பது நம் நாடு செய்த தவப்பயனாகும்.

திருக் கோயில்கள், அன்னசத்திரங்கள், பொதுக் கிணறுகள், இலவசக் கல்விக் கூடங்கள், வைத்திய சாலைகள், தர்ம ஸ்தாபனங்கள் யாவும் இவ் உண்மையை எடுத்துக் காட்டுகின்றன.



*தர்மம்* என்ற சொல் பல வித பொருள் கொண்டது பொதுவாக வேதங்களும் அதைத் தழுவிய நூல்களும் ***எதைச் செய்*** என விதிக்கின்றனவோ அவைதான் தர்மம் எதைச் செய்யாதே என விதிக்கின்றனவோ அவைதான் அதர்மம் . தர்ம காரியங்களில் மிக உயர்வாக போற்றப்படுவது திருக்கோயில் கட்டுதல் திருப்பணிகள் செய்த லாகும் மகா சக்தி வாய்ந்த மகான்களாலும் தெய்வ சிந்தை படைத்த சைவ மன்னர்களாலும் இவை செய்யக் கூடியவையும் செய்யப்பட்டமையும் அனை வரும் அறிந்ததே.

இவ் ஆலய வரலாறும் மகான்களின் ஆசிபெற்ற சிறப்பைப் பெற்றது கீரிமலை, மாவிட்டபுரம் ஆகிய பழமை பெற்ற தலங்களுடன் தொடர்புபட்ட பூர்வீகம் இவ் ஆலயத்திற்கு உண்டு.

பத்துஆண்டுகள் காசியிலிருந்து துர்க்கை உபாசனை புரிந்த ஒரு பெரு ஞானியால் ஆதியில் ஸ்தாபிக்கப்பட்ட ஆலயம் இது.

கொழும்புத்துறை முனிவர் தவயோக சுவாமிகளின் நல்வரவிற்கு இடமளித்த ஆலயம் இது. ஸ்ரீ கரிதாஸ் கிரிசு வாமிகளின் அபிமான சேத்திரம் இது இன்னும் பல ஆன் மீக செய்திகளால் பொலி வுற்ற இத்தலம் இன்று பல்லாயிரக்கணக்கான மக்களின் வருகையாலும் வழிபாட்டாலும் சிறப்புப் பெற்றுள் ளது.

***என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே*** என்று ஒவ்வொருவர்உள்ளத்திலும் நினைக்கத் தோன்றுகின்றது அன்னையின் திருக்கோயில் தனது சின்னமாக வானுயர் கோபுரத்தைக் கொண்டு மிளிர்வது கண்கொள்ளாக் காட்சியாகும்.

"கோபுரஞ்சூழ் மணிமாடக்
கோயில் கண்டேன்
குனித்த பல அலங்கார
வளைவு கண்டேன்
தேவர்களும் உவந்தேத்தும்.
ஸ்தூபி கண்டேன்
திருமுறைகள் வேதமொரு
ஒலிக்கக் கண்டேன்
ஏவல் புரி ஏந்திழையார்
எழிலும் கண்டேன்
இளைஞர் பணி சரியைவழி
இயற்றக் கண்டேன்
பாவலர்கள் பண்ணாரப்
பாடக் கண்டேன்
பராபரையின் சன்னிதியில்
யாவும் கண்டேன்"

என்பது சிறியேன் அனுபவமாகும் . இவ் அனுபவம் இங்கே வழிபாடியியற்றும் யாவர்க்கும் பிறக்குமென்பதில் ஐயமில்லை.

**சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி**

## அத்தாட்சிப் பத்திரங்கள் யாவும் கணனி மயப்படுத்தும் நடவடிக்கை ஆரம்பம்

(கொழும்பு)

பொதுமக்கள் தமக்குத் தேவையான அத்தாட்சிப் பத்திரங்களை விரைவாகப் பெற்றுக் கொள்ளவசிதியாக அவை கணனிமயப் படுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பிறப்பு,திருமணம், இறப்பு தொடர்பிலான 5.6 மில்லியன்அத்தாட்சிப் பத்திரங்கள் தற்போது கணனிமயப்படுத்தப்பட்டுள்ளன.

இத்திட்டம் முதற்கட்டமாக கொழும்பு மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வெற்றி கரமாகப் பூர்த்தியடைந்துள்ளது ஏனைய மாவட்டங்களிலும் இத்திட்டம் விரைவில் செயல் முறைப்படுத்தப்படவுள்ளது. (ஓ)

## இலங்கை காவல்துறை அதிகாரிகள் பயிற்சிக்காக இந்தியா சென்றுள்ளனர்

(சென்னை)

இலங்கையின் 125 காவல்துறை அதிகாரிகள் பயிற்சிகளுக்காக சனிக்கிழமை இந்தியாவைச் சென்றடைந்தனர்.

புதுடில்லிக்குச் செல்லும் வழியில் இவர்கள், சென்னை விமான நிலையத்திற்கு வந்து சேர்ந்ததாக இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தக் குழுவில் இடம் பெற்றிருந்த காவல் துறை அதிகாரி ஒருவர் இந்தியச் செய்திச் சேவைக்குத் தகவல் அளிக்கையில் தாம் எவ்வாறான பயிற்சிகளுக்காக இந்தியாவுக்கு வருகை தந்ததைக் கூற மறுத்துவிட்டார்.

இவர்கள் மட்டக்களப்பலிருந்தே இந்தியா வந்ததாக இந்தியச் செய்திகள் தெரிவித்துள்ளன. (ஓ)

## இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு இடம்பெயர்ந்த மக்கள் வரும்சாத்தியமில்லை

## பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவிப்பு

(கொழும்பு)

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் இடம் பெயந்தவர்களை இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு வருமாறு கூறி அரசாங்கம் விமானங்கள் மூலம் துண்டுப் பிரசுரங்களை வீசிய போதும் அங்கிருந்த மக்கள் வெளியேற்றத்தில் உடனடி மாற்றங்கள் எதுவும் தென்படவில்லையென பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்து வெளியேறி அரசாங்க கட்டுப் பாட்டுப் பகுதிகளுக்கு வரும் மக்களின் எண்ணிக்கை எதிர் வரும் நாட்களிலேயே அதிகரிக்கும் என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தொழும்பு ஆங்கில ஊடகமொன்றிடம் தெரிவித்தார்

விடுதலைப்புலிகளின் பிடியிலிருக்கும் வன்னியை மீட்கும் இறுதிக் கட்ட நடவடிக்கையில் அரசாங்கம் ஈடுபட்டிருப்பதால் ஆபத்து நிறைந்த அந்தப் பகுதிகளிலிருந்து காப்பாற்றிக் கொள்வதற்கு மக்கள் வெளியேறி இராணுவக் கட்டுப்பாட்டுக்கு வர வேண்டும் எனக் கோரிகடந்த வெள்ளிக்கிழமை வன்னிப் பகுதியில் விமானங்கள் மூலம் துண்டுப் பிரசுரங்கள் வீசப்பட்டிருந்தன.

பிரபாகரன் தோல்விகளைச் சந்தித்து வருவதுடன் தன்னைப் பாதுகாப்பதற்கு அவர் முயற்சிக்கிறார்.தன்னைப்பாதுகாப்பதற்கு எந்த விலையைக் கொடுப்பதற்கும் அவர் தயங்கப் போவதில்லை எனப் பிரிகேடியர் அந்த ஊடகத்திடம் கூறினார்.

வன்னியிலிருக்கும் மக்களை வவுனியாவுக்கு வரவழைப்பதே அரசாங்கத்தின் நோக்கமென கடந்த வாரம் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ கூறியிருந்தார் எனினும் மன்னார் , முல்லைத்தீவு உள்ளிட்ட பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்த ஆயிரக் கணக்கானவர்கள் கிளிநொச்சியை மையமாகக் கொண்டுதங்கியிருப்பதாகவும், அவர்கள் அங்கிருந்து இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு வெளியேறுவதற்கான எந்த விதமான சாத்தியக் கூறுகளும் தென்படவில் லையெனவும் அந்த ஊடகம் தனது செய்தியில் குறிப்பிட்டுள்ளது.

இதே வேளை இடம் பெயர்ந்த மக்கள் ஏ-9வீதியிலிருந்து வன்னியின் உட்பகுதிகளுக்கே செல்கின்றனர்.என மன்னார் மறை மாவட்ட ஆயர் இராயப்புஜோசப் கூறினார்.(ஓ)

## ஈரான் நிதியுதவியுடன் எண்ணெய் ஆலை திட்டத்தில் 60 ஆயிரம் மில்லியன் ரூபா மோசடி?

(கொழும்பு)

ஈரானின் நிதி உதவியுடன் இலங்கையில் மேற்கொள்ளப்படவுள்ள இரண்டாவது எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைத் திட்டத்தில் 60ஆயிரம் மில்லியன் ரூபா மோசடி இடம் பெற்றுள்ளதாக இணையத்தளம் ஒன்றில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

பெற்றோலிய மற்றும் பெற்றோலிய வள அமைச்சினால் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை பத்திரத்தின் அடிப்படையில் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைத் திட்டத்திற்கான மொத்தச் செலவினம் 1600 மில்லியன் அமெரிக்க பொலர்களாகும். இதில் ஈரான் அரசாங்கம் 60 வீதத்தைப் பொறுப் பேற்றுள்ளது. எஞ்சிய பகுதியை இலங்கை அரசாங்கம் செலவிட வேண்டும். இத்திட்டத்தின் மூலம் நாளாந்தம் 50 ஆயிரம் பரல்கள் கொண்ட மசகு எண்ணெய் சுத்திகரிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையில் இரண்டாவது எண்ணெய் சுத்திகரிப்பு நிலையமொன்றை நிறுவும் திட்டமொன்றுக்கு 2003 ஆம் ஆண்டில் குளோபல் எனர்ஜி எனும் அமெரிக்க நிறுவனமொன்று பிரேரணையொன்றை சமர்ப்பித்தது. அப்போதைய உத்தேசப்படி மொத்தச் செலவினம் 800 மில்லியன் அமெரிக்க டொலர் என அந்நிறுவனம் தெரிவித்திருந்தது. நாளொன்றுக்கு ஒரு இலட்சம் பரல்கள் கொண்ட மசகு எண்ணெய் சுத்திகரிப்புச் செய்யப்படலாம் எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

இத் திட்டத்திற்கான மொத்தச் செலவினையும் அமெரிக்க நிறுவனம் ஏற்றுக்கொள்வதோடு 25 வீதப் பங்குகளை இலவசமாக இலங்கை அரசாங்கத்திற்கு வழங்குவதாகவும் அந்நிறுவனம் தெரிவித்திருந்தது.

எண்ணெய் சுத் திகரிப்பு ஆலை யின் பராமரிப்புச்செலவை செலுத்துவதன் மூலம் அதன் உரித்துரிமையை இலங்கை அரசாங்கம் கோரலாம். ஆலையின் பழுது பார்ப்பு வேலைகளை நிறுவனம் பொறுப்பேற்கும்அத்துடன் பெற்றோலியக் கூட்டுத்தாபனத் தின் ஊழியர்கள் இதன் சேவைகளுக்காக நியமிக்கப்படுவர் என்று ஆலோசனைகளும் முன்வைக்கப்பட்டன. இந்த உத்தேசப் பிரேரணையை இலங்கை அரசாங்கம் அங்கீகரிக்கவில்லை.

நாள் ஒன்றுக்கு ஒரு இலட்சம் பெரல்கள் சுத்திகரிப்புச் செய்யப்படுவதற்கான ஆலைக்கான செலவை விட 50 ஆயிரம் பரல்கள் சுத்திகரிப்புச் செய்யப்படுவதற்கான ஆலையின் செலவு இவ்வளவா என்ற கேள்வியும் எழுப்படுகிறது. 2003 ஆம் ஆண்டிலிருந்து அத்தகைய சுத்திகரிப்புக்கான செலவினம் இரட்டிப்பாகிள்ளதா என கேள்வி எழுப்பப்படுகிறது.

பெற்றோலிய கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த பல நிபுணர்கள் கூறுவது என்ன வெனில் நாளாந்தம் 50 ஆயிரம் பரல்கள் சுத்திகரிப்புச் செய்யும் ஆலையொன்றை நிறுவ ஆகக்கூடிய செலவு 900-1000 மில்லியன் ரூபாவுக்கு இடைப்பட்டதாகும். என்பதுதான். இத்திட்டம் செயல்படுத்தப்பட்டால் 600 மில்லியன் பொலர்கள் (சுமார் 60 ஆயிரம் மில்லியன் ரூபா), பலரின் கைகளுக்குச் செல்லும் எனவும் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். பெற்றோலிய கூட்டுத் தானத்தின் தொழிற்சங்கங்கள் இந்த விவகாரம் தொடர்பாக தனிப்பட்ட முறையில் கவனம் செலுத்தும்படி ஜனாதிபதியைக் கோரியுள்ளது.

இத்திட்டத்தின் செலவினத்திற்கான 40 வீதப் பங்கினை பெருந்தொகை வட்டிக்கே பெற வேண்டியிருக்கும் இந்த சூழ் நிலையில் இத்திட்டம் 25 வருடங்களுக்கு கூட பயனளிப்பதாக அமையாது.

இந்த ஆலையில் சுத்திகரிக்கப் பட்ட பெற்றோலிய பரலின் விலை திறந்த சந்தையில் இறக்குமதி செய்வதை விட அதிகமாக இருக்கும் என நிச்சயமாக நம்பலாம் எனவும் அவர்கள் கூறுகிறார்கள். (ஓ)


## தமிழ்த் தூது தனிநாயகம் அடிகளின் 28ஆவது ஆண்டு நினைவு தினம்

**01.09.2008**

*தோற்றம்:-1913. 08.02 மறைவு-1980.09.01*



இறைபணிக்கே தம்வாழ்வை எழுதி வைத்தார்
இருந்தமிழின் பெரும்புகழைஇலங்க வைத்தார்
துறைபலவுந் தேர்ந்துலகத் தூது சென்றார்
தூயசங்கத் திரவியங்கள் பரிசுதந்தார்
நிறைவிருந்தாய் 'ஊருறவு' முறை புகன்றார்
நீதி அன்பு உண்மை பண்பை நிறுத்தி வைத்தார்
நறைமலராம் தனிநாயத்தடிகள் நாமம்
ஞாலத்தின் பொன்னேட்டில் நாளும் வாழும்.

*-யாழ்-ஜெயம்-*

***கத்தோலிக்க கலை இலக்கிய வட்டம்***

## ஆவணி மாத உத்தர விழா



இன்று 01.09.2008 திங்கட்கிழமை மாலை 5.30 மணிக்கு உரும்பிராய்சந்தி, சிவதர்ம சாஸ்த்தா ஆலயத்தில்அபிஷேகம், பூசை பஜனை என்பன நடைபெறும்.

*சுவாமி சரணம்*

*உபயம் திரு திருமதி -தங்கராசா*
V.T.S. *லேன்*
*உரும்பிராய் தெற்கு.*

(1646)

**ஆலய குருசுவாமி தானு வாசுதேவ குரு**

மனிதனுக்கு நிகழ்காலம்தான் சொந்தம். அதையும் அவன் இழந்து விடுகிறான்.
~ ஔரேலியன் மார்க்கஸ்

வலம்புரி

# தமிழகத்தில் ஒருகிலோ அரிசி ஒரு ரூபாய்க்கு விற்பனை

தமிழகத்தில் உள்ள நியாய விலைக் கடைகளில் இதுவரை இரண்டு ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டு வந்த ஒருகிலோ அரிசியின் விலை ஒரு ரூபாயாகச் குறைக்கப்பட்டுள்ளது.

ஒரு கிலோ அரிசியின் விலை ஒரு ரூபாயா? என்ற செய்தியை நம்ப முடியாமல் நம் மக்கள் ஆச்சரியப்படுகின்றனர். அந்த ஒரு ரூபாய் விலையில் இங்கும் தமிழகக் கடை இருந்தால் எப்படியிருக்கும் என்ற ஆதங்கம் மறுபுறம். என்ன செய்வது அண்டை நாட்டில் ஒரு கிலோ அரிசி ஒரு ரூபாய்க்கு விற்பனையாகிக் கொண்டிருக்கும்போது எங்கள் கடைகளில் ஒருகிலோ அரிசி நூற்றுமுப்பது ரூபாயைக் கடந்து விட்டதென்ற சோகம் தீரப்போவதில்லை. அதேநேரம் யுத்தம் நடத்தியே தீருவோம்; பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்டுவோம் எனச் சூளுரைப்போர் தமிழகக்கடைகளில் ஒரு கிலோ அரிசி ஒரு ரூபாய்க்கு விற்பனையாகும் செய்தி நிச்சயம் தெரியவாய்ப்பில்லை. அவர்களுக்கு ஆயுதங்களின் விலைகளே அத்துப்படி.

இவர்கள் மக்களைச் சம்காரம் செய்வதற்காக பிறந்தவர்களா என்ற கேள்வி எழுவது நியாயமானதே. 'வயிற்றுக்குச் சோறிடல் வேண்டும்; இங்கு வாழும் மனிதருக்கெல்லாம்' என்ற பாரதியின் கனவை தமிழகம் நனவாக்கிச் கொண்டிருக்கும்போது இலங்கை திருநாட்டின் வயல்களில் நெல் விளைவதற்குப் பதிலாக ஷெல்கள் விழுந்து வெடிக்கின்றன. நாட்டிலுள்ள மக்களின் நலன்கள் கவனிக்கப்படுவதற்குப் பதிலாக அவர்கள் மரநிழல்களிலும் அகதி முகாம்களிலும் அல்லல்படுகின்றனர். அவர்களுக்கான உதவிகள் நிறுத்தப்படுகின்றன.

ஜனநாயகம், அரசு என்பவற்றுக்கான வரையறைகளைத் தெளிவாக ஆட்சியாளர்கள்-அரசியல்வாதிகள் புரிந்து கொள்ளாத வரை இந்த நாட்டில் ஒருகிலோ அரிசியின் விலை தங்கத்தின் விலைக்கு ஈடாக இருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கு- அதிசயப்படுவதற்கு இடமில்லை.

அண்டை நாட்டில் ஒருகிலோ அரிசி ஒரு ரூபாய்க்கு விற்பனையாகின்றது என்ற செய்தியை நாட்டுமக்களுக்குக் கூறி நம் மண்ணிலும் உற்பத்தியைப் பெருக்குவதற்கு மாறாக சோமவன்சவும் ரட்ணசிறியும் யுத்தம் பற்றிக் பேசுகிறார்கள்.

தாம் பிறந்ததே யுத்தம் செய்வதற்காக என்ற நினைப்பில் இருப்பவர்களின் முடிபு அவர்களுக்கும் நாட்டிற்கும் அழிவாகவே இருக்கும்.

# அனைவருக்கும் துரோகம் செய்தவர் கருணாநிதிதான் என்கிறார் நெடுமாறன்

(சென்னை)

காமராஜருக்கும் எம்.ஜி.ஆருக்கும் மூப்பனாருக்கும் நெடுஞ்செழியனுக்கும் துரோகம் இழைத்தவர் முதல்வர் கருணாநிதிதான் என்று தமிழர் தேசிய இயக்கத்தலைவர் பழ. நெடுமாறன் கூறியுள்ளார். முதல்வர் கருணாநிதியை விமர்சித்து நெடுமாறன் கட்டுரை எழுதியிருந்தார்.

இதற்குப் பதிலாக கவிதை மூலம் நெடுமாறனை மிகக் கடுமையாக விமர்சித்திருந்தார் கருணாநிதி, அதற்கு விளக்கம் அளிப்பதாக குறிப்பிட்டு நெடுமாறன் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது, முதல்வர் கருணாநிதி அடுத்த முறை தான் முதல் அமைச்சராக இருக்க விரும்பவில்லை எனக் கூறியதை விமர்சித்து நான் எழு திய கட்டுரையில் எழுப்பப்பட்ட வாதங்களுக்கு எவ்வித பதிலும் கூறதிராணியின்றி தனிப்பட்ட முறையில் மிகக் கீழ்த்தரமாக வசை புராணம் பாடியிருக்கிறார். அவர் தரத்திற்கு நானும் இறங்கி பதிலடி கொடுக்க விரும்பவில்லை எனினும் அவர் கூறியுள்ள அப்பட்டமான பொய்களுக்குப் பதில் கூற வேண்டியது அவசியம் ஆகும்.

பெருந்தலைவர் காமராசர் வாழ்ந்த காலத்திலும் அதற்குப் பிறகு இன்று வரையிலும் அவரது நினைவை நன்றியறிதலுடன் போற்றி வருபவன் நான் என்பதை தமிழகம் அறியும். ஆனால் காமராஜருக்கு நான் துரோகம் செய்துவிட்டதாக புனைந்து கூறியிருக்கிறார் கருணாநிதி.

1969ஆம் ஆண்டில் நாகர்கோவில் பாராளுமன்றத் தொகுதியின் இடைத்தேர்தலில் காமராஜர் போட்டியிட்டபோது அவரைத் தோற்கடிக்க வரிந்துகட்டிக்கொண்டு பொய்யான பழிகளைச் சுமத்தியும், இது பாராளுமன்றத் தொகுதியல்ல, இது நாடார் மன்றத் தொகுதி என்று சாதிவெறியைக் கிளப்பியும் துரோகம் செய்தவர் கருணாநிதி.

அறிஞர் அண்ணாவால் நாட்டுக்கு அடையாளம் காட்டப்பட்ட நாவலர் நெடுஞ்செழியனுக்கு துரோகம் செய்து பதவி நாற்காலியை குறுக்குவழியில் கைப்பற்றி அண்ணாவுக்கு துரோகம் செய்தவரும் அரியணை ஏற ஏணியாகப் பயன்பட்ட எம்.ஜி.ஆரை எட்டி உதைத்து கட்சியிலிருந்து நீக்கி துரோகம் புரிந்தவரும் கருணாநிதியே.

1996ஆம் ஆண்டு பிரதமராகும் வாய்ப்பு காவிரி மைந்ததான மூப்பனாருக்கு கிடைத்தபோது அவருக்கு துரோகம் செய்து காவிரிப் பகைவனான தேவகவுடா பிரதமராக துணை நின்றவர் கருணாநிதி. இதன் மூலம் தமிழக விவசாயிகளுக்கு துரோகம் செய்தவர் இவரே. மேலும் 1983ஆம் ஆண்டு நான் தியாகப் பயணம் மேற்கொண்டு இலங்கைக்குப் படகில் சென்றபோது கடைசிவேளையில் கலந்துகொண்டவர் குமரி ஆனந்தன்.

நடுக்கடலில் எங்கள் படகை தடுத்து நிறுத்திய கடற்படையினர் என்னோடு அவரையும் கைது செய்து கரைக்கு கொண்டுவந்தனர். இந்த உண்மையை திரித்து ஏதோ கூறுகிறார் கருணாநிதி. பொய்யும் புரட்டும் அவருக்கே ஆகிவந்த கலை. வயது முதிர்ந்த இந்தக் காலத்திலாவது உண்மையைப் பேச அவர் முன்வரவேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

# வன்னியில் இரவில் வான் தாக்குதல்கள் அடிப்படை மனித உரிமை மீறலாகும்

## வடக்கு கிழக்கு மனித உரிமைகள் செயலகம் கண்டனம்

(கொழும்பு)

வன்னிப்பகுதிகளில் இரவு வேளைகளில் இலங்கை வான் புடை விமானங்கள் மேற்கொள்ளும் தாக்குதல்கள் குறித்து வடக்கு கிழக்கு மனித உரிமைகள் செயலகம் கண்டனம் தெரிவித்துள்ளது.

படையினரின் நவடிக்கைகள் காரணமாக பல்வேறு பகுதிகளிலுமிருந்து இடம்பெயர்ந்து கிளிநொச்சிப் பகுதிகளில் பற்றைக்காடுகளிலும் மரநிழல்களின் கீழும் மக்கள் தங்கியிருக்கின்ற சூழ்நிலையில் இரவு வேளைகளில் குண்டு வீச்சு வானூர்திகள் கடும் இரைச்சலுடன் பறப்பிலீடுபடுவதும் குண்டுகளை வீசுவதும் மிக மோசமான மனிதாபிமானமற்ற நடவடிக்கைகளாகும். பல்வேறு அவலங்கள் துயரங்களுடன் வாழும் மக்களை இரவு வேளைகளில் கூட உறங்கவிடமால் செய்வது இம் மக்களின் அடிப்படை மனித உரிமைகளைப் பறிக்கும் செயலாகும்.

கிளிநொச்சி மாவட்டத்தில் இருபத்திரண்டு பாடசாலைகளில் தங்கியிருக்கும் ஒரு இலட்சத்து 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் தற்போது இரவில் இக்குண்டு வீச்சு விமானங்களிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்வதென்பது சிக்கலானதாகும்.

தற்போது பெய்து வரும் மழை காரணமாகவும் இடம்பெயர்ந்த மக்கள் பெரும் அவலங்களுக்குள்ளாகியுள்ளனர். இவ்வாறு வடக்கு கிழக்கு மனித உரிமைகள் செயலகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# உயர் பாதுகாப்பு வலயத்திற்குள் செல்லும் வாகனங்கள் எழுத்து மூல அனுமதி பெறவேண்டும்

## அரச வர்த்தமானி அறிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தங்கியிருக்கும் அலரிமாளிகையை அண்மித்த உயர் பாதுகாப்பு வலயப் பகுதிகளுக்குள் லொறிகள்,பாரஊர்திகள்,ஊர்வலங்கள்,பேரணிகள், அரசியல் ஒன்று கூடல்கள் மற்றும் வாகனப் பேரணிகள் செல்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தடையை மீறிச் செல்லும் வாகனங்கள் தொடர்ந்தும் அந்தத் தவறைச் செய்யும் பட்சத்தில் வாகனங்களைப் பறிமுதல் செய்வதற்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. உயர் பாதுகாப்புவலயத்துக்குள் ஒருவர் லொறியுடன் செல்ல வேண்டுமாயின்பிரதி பொலிஸ் மா அதிபர் ஒரு வரின் எழுத்து மூல அனுமதியைப் பெற்றே செல்லவேண்டும் எனவும் அவ்வாறு பெறப்படும் அனுமதிப் பத்திரத்தை சட்டத்தை நிலைநாட்டும் அதிகாரி ஒருவரால் கோரப்படும் போது அதனைக் காண்பிப்பதற்கு தயாராக வைத்திருக்க வேண்டும் எனவும் வர்த்தமானி மூலம் அரசாங்கம் அறிவித்துள்ளது.

இந்த அறிவிப்பையும் மீறி உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் நுழைபவர்களிடம்முதல்தடவை 5ஆயிரம் ரூபாவுக்கும் குறையாத தண்டப்பணமும், மீண்டும் அந்தத் தவறைச் செய்யும் போது 10ஆயிரம் ரூபாவுக்குக் குறையாத தண்டப்பணமும் அறவிடப்படுமென் அந்த வர்த்கமானி அறிவித்தலில். குறிப்பிடப்பட்டுள்ளது.தடையையும் மீறி உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் ஒருவர் அனுமதியின்றி வாகனத்துடன் மீண்டும் மீண்டும் நுழைந்தால் அந்த வாகனம் அரசாங்கத்தால் பறிமுதல் செய்யப்படும் எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயர் பாதுகாப்பு வலயப் பகுதியில் எவரும் லொறியையோ அல்லது பாரஊர்தியையோ நிறுத்தி அதில் பொருள்களை ஏற்றுவதற்கோ அல்லது அதிலிருந்து பொருட்களை இறக்குவதற்கோ அனுமதிக்கப் படமாட்டார்கள் என அந்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கொள்ளுப்பிட்டி புகையிரத நிலைய வீதியில் ஆரம்பித்து கொள்ளுப்பிட்டிசந்தியூடாக காலிமுகத்திடல் சந்தி, கொம்பனி வீதி . நவம் மாவத்தை, கோட்டை ஆகிய பகுதிகள் இந்த உயர் பாதுகாப்புவலயத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. கடற் கரையோரப் பகுதியில் கொள்ளுப்பிட்டி புகையிரத நிலையத்திலிருந்து கோல்பேஸ் விடுதிவரையும் உயர் பாதுகாப்பு வலயமாகபிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த உயர் பாதுகாப்புவலயப்பகுதியில் புதிய கட்டடங்களை அமைப்பது, புனரமைப்பது,விஸ்தரிப்பது போன்ற நடிவடிக்கைகளும் தடைசெய்யப்பட்டுள்ளன.அதே நேரம் பாதுகாப்புக் காரணங்களுக்காக உயர்பாதுகாப்புவலயத்தில் பட்டாசுகள் கொழுத்துதல் மற்றும் வான வேடிக்கைகளைக் காண்பித்தல் போன்ற நடிவடிக்கைகளும் தடை செய்யப்பட்டுள்ளன.

எனினும் புதிதாக நிர்மாணிக்கப்பட்டிருக்கும் காலிமுகத்திடல் பகுதி உயர் பாதுகாப்புவலயத்துக்குள் உள்ளடக்கப்படாத போதும், காலி முகத்திடல் தவிர்ந்த அதனை அண்மித்த அனைத்துப் ப்குதிகளும்உயர் பாதுகாப்புவலயமாக பிரகட னப்படுத்தபட்டுள்ளன. (இ)

# சுவாமி விவேகானந்தரின் ஆளுமை வளர்ச்சி



இயையுடன் முன்னேறிய மனிதனைப்பார்க்கவே நாம் விரும்புகிறோம். அவன் விசாலமான இதயம் பரந்த மனம் (உயர்ந்த செயல்) இவற்றைப் படைத்திருக்க வேண்டும்... உலகத்தின் துயரையும் துன்பத்தையும் ஆழ்ந்து உணரும் இதயம் படைத்தவனே நமக்குத் தேவை உணர்வதோடு நில்லாமல் பொருட்களின் கருத்தை அறிந்து இயற்கையினுள்ளும் அறிவிலும் ஆழமாக ஊடுருவிக் காண்பவனே நமக்குத் தேவை அத்துடன் நிற்காமல் (அந்த உணர்ச்சியையும் அறிவையும் செயலாக்குபவனே நமக்கு மிகவும் வேண்டப்படுபவன் மூளை ,இதயம், செயல் இவை ஒருங்கிணைந்து செயல்படுவதே தேவை. (தொடரும்)

# பறக்கும் விமானத்தில் அமெரிக்க-பாகிஸ்தான் இராணுவத் தளபதிகள் இரகசிய ஆலோசனை

அமெரிக்க-பாகிஸ்தான் இராணுவத் தளபதிகள் பறக்கும் விமானத்தில் இரகசிய ஆலோசனை நடத்தியுள்ளனர். ஆப்கானிஸ்தான் எல்லையில் அதிகரித்துவரும் தீவிரவாதத்தை ஒடுக்குவதற்கான நடவடிக்கைகள் குறித்தே அவர்கள் ஆலோசனை நடத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அல்கொய்தா இயக்கம் பாகிஸ்தான் தீவிரவாதிகளுடன் நெருக்கத்தை வளர்த்துக்கொண்டுள்ளது. இது தான் அந்த இயக்கத்துக்கு பாகிஸ்தானில் தளம் அமைக்க உதவியாக உள்ளது. இதன்மூலம்தான் அந்த இயக்கம் சரிவில் இருந்து மீண்டுள்ளது. பாகிஸ்தானில் அல்கொய்தா இயக்கம் தீவிரவாதத்துக்கு ஆள்திரட்டி வருகிறது. அவர்களுக்கு பயிற்சியும்அளித்துவருகிறது. இது அமெரிக்காவுக்கு கவலையை அளித்துள்ளது. இதற்கிடையில் பாகிஸ்தான்-ஆப்கானிஸ்தான் ஆகிய இருநாடுகளின் எல்லைப் பகுதியில் சமீப காலமாக வன்முறை அதிகரித்து வருகிறது. இதை எப்படி கட்டுப்படுத்துவது என்பதும் அமெரிக்க இராணுவத்தின் கவலையாக உள்ளது.

இதைத்தொடர்ந்து தான் அமெரிக்க இராணுவம் பாகிஸ்தான் இராணுவத்துடன் ஆலோசனை நடத்தி அவர்களை தீவிரவாத ஒழிப்பு நடவடிக்கையில் மேலும் தீவிரமாக ஈடுபடும் நடவடிக்கைக்கு தூண்டவேண்டும் என்று முடிவு எடுத்தது. இது குறித்து பேசி முடிவு எடுப்பதற்காக பாகிஸ்தான்இராணுவத் தளபதிகளை அமெரிக்க தளபதிகள் சந்தித்தனர். பாகிஸ்தான் இராணுவத்தளபதிகளுடன் நடத்தப்படும் ஆலோசனை இரகசியமாக இருக்க வேண்டும் என்பதற்காகவும் அது வெளியே கசிந்து விடக்கூடாது என்பதற்காகவும் அவர்கள் பறக்கும் விமானத்தில் ஆலோசனைநடத்தினார்கள். இந்திய பெருங்கடலின்மீது பறந்தபடி அவர்கள் ஆலோசனை நடத்தினார்கள்.

பகல் முழுவதும் நடந்த இந்த ஆலோசனைக்கூட்டத்தில் அமெரிக்க இராணுவ முப்படைத்தளபதிகளின் தலைவர் அட்மிரல் மைக் முல்லன். பாகிஸ்தான் இராணுவ தலைமை தளபதி கயானி ஆகியோர்ஆலோசனை நடத்தினார்கள். (ஓ-6)

## ரஷ்யாவுடன் உறவைத் துண்டிப்பதாக ஜோர்ஜியா அறிவிப்பு

ஜோர்ஜியாவுக்கு சொந்தமான தெற்கு ஒசட்டியா, அப்காசியா ஆகிய மாநிலங்களை ரஷ்யா, தனி நாடுகளாக அங்கீகரித்துள்ளது. மேலும் ஜோர்ஜியாவுக்குள் புகுந்த ரஷ்ய இராணுவம் இன்னும் வெளியேறவில்லை. இதனால் இரு நாடுகளுக்கும் இடையிலான மோதல் உச்சக்கட்டத்தை அடைந்துள்ளது. இதையடுத்து ரஷ்யாவுடனான உறவை துண்டித்துக் கொள்வதாக ஜோர்ஜியா அறிவித்துள்ளது. இதன்படி, ஜோர்ஜியாவில் உள்ள ரஷ்ய தூதரக அதிகாரிகள் வெளியேற வேண்டும் என்றும், அதுபோல் ரஷ்யாவில் உள்ள ஜோர்ஜியா தூதரக அதிகாரிகள், சில நாட்களில் வெளியேறுவார்கள் என்றும் ஜோர்ஜியா கூறியுள்ளது.

மேலும், ரஷ்ய படைகளை வெளியேற்ற ஐரோப்பிய யூனியன், அமெரிக்கா ஆகியவற்றின் உதவியை ஜோர்ஜியா நாடியுள்ளது. (ஓ-6)

**உலக தரிசனம்**

# பாகிஸ்தானில் விமானப்படையினரின் தாக்குதலில் 40 பயங்கரவாதிகள் பலி

(மின்கோரா)

பாகிஸ்தானிலுள்ள ஸ்வாட் பள்ளத்தாக்கில் பயங்கரவாதிகளின் நிலைகள் மீது விமானப் படை நடத்திய தாக்குதலில் 40 பயங்கரவாதிகள் பலியாயினர். பாகிஸ்தானில் சமீப நாட்களாக வன்முறை அதிகரித்து வருகிறது. வடமேற்கு பகுதியில் பயங்கரவாதிகள்மீது பாக். இராணுவம் தாக்குதல்நடத்தி வருகிறது. பதிலுக்கு பயங்கரவாதிகள் இராணுவத்தின் மீது வெடிகுண்டு தாக்குதல் நடத்தினர்.

இஸ்லாமாபாத்திலிருந்து 150கி.மீ தொலைவில் ஸ்வாட் பள்ளத்தாக்கு அமைந்துள்ளது. இங்கு பயங்கரவாதிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையே கடும் சண்டை நடந்து வருகிறது. ஸ்வாட் பள்ளத்தாக்கில் உள்ள பயங்கரவாதிகளின் நிலைகள் மீது விமானப் படை போர்விமானங்கள் மற்றும் ஹெலிகொப்டர்கள் ஆகியவை வெள்ளிக்கிழமை குண்டுகளை வீசின. இத்தாக்குதல் சனிக்கிழமை அதிகாலை வரை நீடித்தது. ஒரு நாளில் 40தலிபான் பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர்.

ஸ்வாட் பள்ளத்தாக்கில் ஒளிந்திருக்கும் பயங்கரவாதிகளை ஒழிக்கம் வரை இராணுவ நடவடிக்கை தொடரும்படி மாகாண அரசு மற்றும் இராணுவத்திடம் இருந்து உத்தரவு வந்துள்ளது என்று பாக். இராணுவச் செய்தி தொடர்பாளர் நசீர்அலி தெரிவித்தார். கடந்தாண்டு வரை ஸ்வாட் பள்ளத்தாக்கு சுற்றுலாப் பயணிகளின் சொர்க்க புரியாக திகழ்ந்தது.

ஆப்கானிஸ்தான் எல்லையில் அமைந்துள்ள இப் பள்ளத்தாக்கில் ஊடுருவியுள் ளதலிபான்கள் அடிக்கடி வன்முறையில்இறங்கி வருகின்றனர். (ஓ-6)

# அமெ. குடியரசுக்கட்சியின் உபஜனாதிபதி வேட்பாளராக சாராபெலின் தெரிவு



அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஆளும் குடியரசுக் கட்சியின் உப ஜனாதிபதி வேட்பாளராக சாராபெலின் எனும் பெண்மணி தெரிவு செய்யப்பட்டுள்ளார். அக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரான ஜோன் மெக்கெய்ன் தனது 72 ஆவது பிறந்த தினமான 29ஆம் திகதி இவ்வறிவிப்பை வெளியிட்டார்.

44 வயதான சாரா பெலின் அலஸ்கா மாநிலத்தின் ஆளுநராக 2006 ஆம் ஆண்டிலிருந்து பணியாற்றுகிறார்.

அமெரிக்க வரலாற்றில் பிரதான கட்சியொன்றின் உப ஜனாதிபதி வேட்பாளராக தெரிவு செய்யப்பட்ட இரண்டாவது பெண் சாரா பெலின் ஆவார். 1984 ஆம் ஆண்டில் ஜனநாயகக் கட்சியின் உப ஜனாதிபதி வேட்பாளராக ஜெரால்டின் பெராரோ போட்டியிட்டு தோல்வியுற்றமை குறிப்பிடத்தக்கது.

சாரா பெலின் 1984 ஆம் ஆண்டில் அலஸ்கா மாநில அழகுராணிப் போட்டியில் இரண்டாமிடம் பெற்றவர். ஊடகத்துறையில் பட்டம் பெற்ற அவர் அலஸ்காவின் வஸில்லா நகர மேயர். அலஸ்கா எண்ணெய் காஸ் பாதுகாப்புக் குழுவின் தலைவி ஆகிய பதவிகளையும் வகித்துள்ளார். குடியரசுக்கட்சியின் உப ஜனாதிபதி வேட்பாளராக சாரா பெலின் தெரிவு செய்யப் பட்டுள்ளதையடுத்து அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் பராக் ஒபாமா, ஜோன் மெக்கெய்ன் இருவரில் யார் வென்றாலும் அது புதிய வரலாறாக அமையும். ஒபாமா வென்றால் அவர் ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்ட முதல் ஆபிரிக்க அமெரிக்கராக விளங்குவார். மெக்கெய்ன் வென்றால் முதல் தடவையாக பெண்ணொருவர் உப ஜனாதிபதியாக பதவி வகிப்பார். (ஓ-6)

# ஈரான் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தினால் அது உலக யுத்தத்துக்கு வழிவகுக்கும்

## -ஈரான் இராணுவத் தளபதி எச்சரிக்கை

ஈரான் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தினால் அது உலக யுத்தத்துக்கு வழிவகுப்பதாக அமைந்துவிடும் என்று ஈரான் இராணுவ துணைத்தளபதி மசெத் ஜெஸாயேரி எச்சரித்தார்.

ஈரான் மீது அமெரிக்காவோ அல்லது இஸ்ரேலோ போர் தொடுத்தால் உலகப் போர் தொடங்கிவிடும் என்று அவர் ஓர் அறிக்கையில் கூறியுள்ளார்.

அமெரிக்காவின் தேவையற்ற தலையீடு பாலஸ்தீனத்தில் யூதர்களின் ஆக்கிரமிப்பு ஜோர்ஜியா, ஆப்கானிஸ்தான், ஈராக், சூடான் ஆகியவற்றில் அமைதியற்ற நிலை ஆகியவை உலக யுத்தத்துக்கு வழிவகுப்பதாக உள்ளது என்று அவர் கூறியுள்ளார்.

ஈரான் மீது போர் தொடுக்கும் எந்த ஒரு நாடும் அல்லது போலிர ராஜ்யமும் அடியோடு நசுக்கப்படும் என்று அவர் சவால் விடுத்தார்.


இஸ்ரேல் நாட்டை ஈரான் இன்னும் அங்கீகரிக்கவில்லை. எனவே இஸ்ரேலை போலி ராஜ்யம் என்றே ஈரான் நாட்டவர் அழைத்து வருகின்றனர். இஸ்ரேலை குறிப்பிடும் வகையிலேயே போலிராஜ்யம் என்று அவர் கூறினார்.

ஈரானில் உள்ள அணுஉலைகள் மூலம் அணு குண்டு தயாரிக்கும் முயற்சியில் அந்நாட்டு அரசு ஈடுபட்டுள்ளது. எனவே ஈரான் அணுஉலைகளை சர்வதேச அணுசக்தி ஆணையம் சோதனையிட அனுமதிக்க வேண்டும் என்று அமெரிக்கா உள்ளிட்ட மேற்கத்திய நாடுகள் வலியுறுத்தி வருகின்றன. ஆனால் ஈரான் இதை ஒப்புக்கொள்ளவில்லை. தமது நாட்டில் உள்ள அணு உலைகள் அணு மின்சாரம் தயாரிக்கவே பயன்படுகின்றன.

அணுகுண்டு தயாரிக்கும் முயற்சியில் ஈடுபடவில்லை என்று மறுத்து வருகிறது. அதோடு சர்வதேச அணுசக்தி ஆணையத்தின் சோதனைக்கும் ஈரான் ஒப்புக்கொள்ளவில்லை. இதையடுத்து ஈரான் மீது தாக்குதல் நடத்த அமெரிக்கா பரிசீலித்து வருகிறது.

இஸ்ரேலை கொண்டு ஈரான்மீது திடீர் தாக்குதல் நடத்தி அங்குள்ள அணு உலைகளைத் தகர்க்க அமெரிக்கா திட்டமிட்டுள்ளதாக கூறப்பட்டு வருகிறது.

இந்த நிலையில்தான் அமெரிக்காவுக்கு ஈரான் இராணுவ துணைத் தளபதி எச்சரிக்கை விடுத்துள்ளார். (ஓ-6)



எதிரிகளின் ஏவுகணைகளை நடுவானிலே தாக்கியழிக்கும் 12 மீற்றர் நீளம் கொண்ட அதிநவீன ஏவுகணை சோதனையை ரஷ்யா கடந்த வியாழக்கிழமை வெற்றிகரமாக நிகழ்த்தியது. இது 6000 கிலோமீற்றர் தூரம் வரை சென்று எதிரிகளின் இலக்கை தாக்கவல்லதும் நடுவானிலே எதிரிகளின் ஏவுகணைகளை தாக்கி அழிக்கவல்லதுமாகும்.

# ஈராக்கில் இதுவரை 11 ஆயிரம் கைதிகள் விடுவிக்கப்பட்டுள்ளனர்

## -அமெரிக்கா தகவல்

(ஈரான்)

ஈராக்கில் இதுவரை 11ஆயிரம் கைதிகள் விடுவிக்கப்பட்டுள்ளதாக, அமெரிக்க இராணுவ வட்டாரம் தெரிவித்துள்ளது.

விடுவிக்கப்பட்டவர்களில் பெரும்பாலானோர் ஈராக்கில் அமெரிக்க இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள சிறைகளில் அடைக்கப்பட்டிருந்தவர்கள.

இவர்கள் அனைவரும் ஒரு கட்டத்தில் ஈராக் பொதுமக்கள் மற்றும் அங்கு முகாமிட்டிருந்த பன்னாட்டு படைகளின் பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தலாக திகழ்ந்தனர்.

இதனால், அவர்கள் கைதுசெய்யப்பட்டு சிறை வைககபபட்டனா. தற்போது அவாகளது தண்டனைக் காலம் நிறைவடைந்துள்ள நிலையில் இனிமேலாவது ஆக்கபூர்வமான வாழ்க்கையை மேற்கொள்வார்கள் என்ற நம்பிக்கையில் விடுவிக்கப்பட்டுள்ள்தாகவும் அமெரிக்க இராணுவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈராக்கில் அமெரிக்க இராணுவ சிறைகள் மற்றும் நாடுமுழுவதும் உள்ள சிறைகளில் சுமார் 47 ஆயிரத்து.400 பேர் கைதிகளாக அடைக்கப்பட்டுள்ளதாக, ஈராக் மனித உரிமை அமைச்சகம் இந்த மாதத்தின் தொடக்கத்தில் தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது. (ஓ-6)

# 55 வயது இந்தியப் பெண்ணுக்கு ஒரே பிரசவத்தில் 4 குழந்தைகள்

(ரோம்)

இத்தாலியில் வசிக்கும் 55வயதான இந்திய பெண்ணுக்கு ஒரே பிரசவத்தில் நான்கு குழந்தைகள் பிறந்தன. இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர் பாப்லா மகர்சிங். இத்தாலியில்இரும்பு வியாபாரம் செய்து வருகிறார். இவரது மனைவிக்கு தற்போது 55 வயதாகிறது. திருமணம் முடிந்து பல ஆண்டுகளாக இவர்களுக்கு குழந்தை இல்லை. இதையடுத்து இத்தாலியில் செயற்கை கருவூட்டல் மூலமாக பாப்லா சிங்கின் மனைவி கருத்தரித்தார். ஆனால் இந்த முயற்சி தோல்வி அடைந்தது. இதையடுத்து இந்தியா வந்த அவர் சிகிச்சைக்கு பின் மீண்டும் இத்தாலிக்குச்சென்றார். சில மாதங்களுக்கு முன் கர்ப்பமானார். கடந்த வாரம் வடக்கு இத்தாலியில் உள்ள மாண்டுவா நகரில் சமீபத்தில் அனுமதிக்கப்பட்டார். அங்கு அவருக்கு நான்கு ஆண் குழந்தைகள் பிறந்தன. இதுகுறித்து டாக்டர்கள் கூறுகையில், எட்டு மாதத்திலேயே குழந்தைகள் பிறந்துவிட்டன. தற்போது தாயும் குழந்தைகளும் நலமாக உள்ளனர். குழந்தைகள் தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றன. ஒவ்வொரு குழந்தையும் 750லிருந்து 980கிராம் வரை எடை உள்ளன. குழந்தைகளின் தாய் மிகவும் மன உறுதியுடன் இருந்தது எங்களுக்கு ஆச்சரியத்தை அளிக்கிறது என்றனர். பாப்லா மகர்சிங் கூறுகையில்,

இந்த நேரத்திற் காகவே நீண்ட நாட்கள் காத்திருந்தோம். மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது குழந்தை களுக்கு மானவ், மன்மீத். ரோஷன், ரத்வீர் என பெயர் வைத்துள்ளோம் என்றார். (ஓ-6)



# அன்ரூ பிளின்டொப் சகல துறையிலும் கலக்கல்; இங்கிலாந்து அணியின் வெற்றிநடை தொடர்கிறது

(லண்டன்)

பிளின்டொப்பின் துல்லியமான பந்துவீச்சு, அதிரடியான துடுப்பாட்டத்தின் மூலம் நான்காவது ஒருநாள் போட்டியிலும் இங்கிலாந்து அணி டக்-வேத் லூயிஸ் முறையில் 7 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

இங்கிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணி 4 டெஸ்ட், 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் டெஸ்ட் தொடரை தென்னாபிரிக்க அணி 3:1 என்ற கணக்கில் கைப்பற்றியது. தொடர்ந்து நடைபெற்றுவரும் ஒருநாள் தொடரில் முதல் 3 போட்டிகளிலும் இங்கிலாந்து அணி வெற்றி பெற்று தொடரை 3:0 என்ற கணக்கில் தனதாக்கியது.

இந்நிலையில் நான்காவது ஒருநாள் போட்டி நேற்று லண்டன் லோட்ஸ் மைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி முதலில் களத் தடுப்பை தெரிவு செய்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 6 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 37 ஓட்டங்களை எடுத்தபோது மழை குறுக்கிட்டதால் ஆட்டம் இடைநிறுத்தப்பட்டது.

பின்னர் சில மணிநேரத்தில் மழை நின்றது. தொடர்ந்து ஆட்டம் ஆரம்பமாகியபோது இரு அணிகளுக்கு தலா 33 ஓவர்கள் என குறைத்து நிர்ணயிக்கப்பட்டது.

இந்நிலையில் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 32.1 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 183 ஓட்டங்கள் எடுத்தபோது மீண்டும் மழை பெய்ய ஆரம்பித்தது. இதனால் ஆட்டம் இடைநிறுத்தப்பட்டு பின்னர் ஒரு மணி நேரத்தில் ஆட்டம் ஆரம்பமானது.

தென்னாபிரிக்க அணி 32.1 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 183 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டம் நிறுத்தப்பட்டு டக்-வேத் லூயிஸ் முறையில் இங்கிலாந்து அணிக்கு வெற்றி இலக்காக 20 ஓவர்களில் 137 ஓட்டங்களை எடுக்கவேண்டுமென நிர்ணயிக்கப்பட்டது.

துடுப்பாட்டத்தில் கிப்ஸ் 74 ஓட்டங்களையும் அம்லா 34 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் பிளின் டொப் 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். பதிலுக்கு 20 ஓவர்களில் 137 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி பிளின்டொப்,பீற்றர்சனின் அதிரடியான ஆட்டத்தின் மூலம் 17.4 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 137 ஓட்டங்களை எடுத்து டக்-வேத் லூயிஸ் முறையில் 7 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதில் ஆட்டமிழக்காமல் ஷா 44 ஓட்டங்களையும் அணித்தலைவர் பீற்றர்சன் 40 ஓட்டங்களையும் பிளின் டொப் ஆட்டமிழக்காமல் 12 பந்துகளில் (5 பவுண்டரி, ஒரு சிக்ஸர் உட்பட) 31 ஓட்டங்களையும் எடுத்தனர்.

ஆட்டநாயகனாக சகல துறைகளிலும் ஜொலித்த இங்கிலாந்து அணியின் அன்ரூ பிளின் டொப் தெரிவானார்.

இவ் வெற்றியின் மூலம் இங்கிலாந்து அணி 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் 4:0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது.

இத்தொடரை இங்கிலாந்து அணி 5:0 என கைப்பற்றுமா? அல்லது ஒரு போட்டியிலாவது வெற்றி பெற்று தென்னாபிரிக்க அணி ஆறுதலடையுமா? என்ற வினாவுக்கு நாளை மறுதினம் வரை காத்திருப்போம். (5)

# மீன் பிடிக்கச் சென்றதால் வாய்ப்பை இழந்த சைமண்ட்ஸ்



இந்திய வீரர்களுடன் மோதி அடிக்கடி சர்ச்சையில் சிக்கிக் கொள்ளும் அவுஸ்திரேலிய சகலதுறை ஆட்டக்காரர் அன்ரூ சைமண்ட்ஸ், தற்போது அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபையின் ஒழுங்கு நடவடிக்கைக்கு ஆளாகியுள்ளார்.

பங்களாதேஷுக்கு எதிரான போட்டிக்கு முன்னதான அணி கூட்டத்தில் பங்கேற்காமல் மீன்பிடிக்கச் சென்றதால் சைமண்ட்ஸ் தொடரிலிருந்தே நீக்கப்பட்டுள்ளார்.

அவுஸ்திரேலிய -பங்களாதேஷ் அணிகளுக்கு இடையே 3 போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடர் அவுஸ்ரேலியாவில் நடைபெற்று வருகிறது.

முதல் போட்டி டார்வினில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

அப்போட்டிக்கு முன்னதாக வீரர்கள் ஆலோசனைக் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்திருந்தது கிரிக்கெட் சபை. அதில் சைமண்ட்ஸ் கலந்து கொள்ளவில்லை.

இதனால் அதிர்ச்சியுற்ற கிரிகெட் சபை, உடனடியாக சைமண்ட்ஸுக்கு சொந்த ஊர் திரும்ப உத்தரவிட்டுள்ளது.

ஆனால் காரணத்தை தெரிவிக்க மறுத்துவிட்டது.

இதேபோன்று 2005ஆம் ஆண்டு பங்களாதேஷுக்கு எதிரான போட்டிக்கு முன்னர் மதுபான விடுதிக்குச் சென்று அவர் கும்மாளம் அடித்ததால் 2 போட்டிகளில் விளையாடத் தடை விதிக்கப்பட்டது.

அப்போட்டியில் அவுஸ்திரேலியா தோற்றுப் போனது.

அதுமட்டுமே பங்களாதேஷிடம் அந்த நாடு தோல்வியுற்ற போட்டியாக உள்ளது.

இது மட்டுமல்லாமல் சைமண்ட்ஸ் மீன் பிடிக்கும் விடயத்தில் 1999ஆம் ஆண்டு நடந்த சம்பவம் பிரபலமானது.

அப்போது சக வீரர் மத்யூ ஹைடனும் மீன்பிடிக்க படகில் சென்றபோது, படகு தண்ணீருக்குள் மூழ்கியது. பின்னர் இரண்டு பேரும் நீந்தி கரையேறி உயிர் தப்பினர்.

இந் நிலையில் மீண்டும் இதுபோன்ற ஒழுங்கீன நடவடிக்கையில் ஈடுபட்டால் ஒப்பந்த வீரர்கள் பட்டியலில் இருந்து நீக்கப்படுவார் என்று சைமண்ட்ஸை அவுஸ்திரேலியா கிரிக்கெட் சபை எச்சரித்துள்ளது.

டார்வினில் நேற்று முன்தினம் நடந்த முதல் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் 180 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அவுஸ்திரேலியா வெற்றி பெற்றது. (5)

## தங்கம் வென்றவர்களுக்கு ரூ. 36 இலட்சம் பரிசு

(பீஜிங்)

ஒலிம்பிக்கில் தங்கம் வென்ற சீன வீரர், வீராங்கனைகள் பரிசு மழையில் நனைகின்றனர். பீஜிங்கில் 29-வது ஒலிம்பிக் போட்டி நடந்தது. இதில் போட்டியை நடத்திய சீனா பதக்கப்பட்டியலில் முதலிடத்தைப் பிடித்து சாதித்தது.

தங்கப் பதக்கம் பெற்ற ஒவ்வொருவருக்கும் ரூபா 36 இலட்சம் பரிசு வழங்கி சீனா கௌரவித்துள்ளது.

இது 2004இல் தங்கம் வென்றவர்கள் பெற்ற பரிசுத் தொகையை விட இரு மடங்காகும்.

ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளுக்காக கடந்த ஆண்டு ரூபா 514 கோடியை சீனா ஒதுகியது. தற்போது ஒலிம்பிக்கில் ஒரு பதக்கம் பெற்றதற்காக ஒரு ஆண்டில் ரூபா 10 கோடிவரை செலவு செய்துள்ளது. (5)

# பெண்கள் ஒருநாள் கிரிக்கெட்; இங்கிலாந்து அணி வெற்றி

(பாத்)

இந்தியாவுக்கு எதிரான முதல் ஒருநாள் பெண்கள் கிரிக்கெட் போட்டியில் இங்கிலாந்து பெண்கள் அணி 8 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்று முன்னிலை வகிக்கிறது.

இங்கிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய பெண்கள் அணி 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் மற்றும் ஒரு இருபது - 20 போட்டியில் விளையாடுகிறது. இதில் முதலாவது ஒருநாள் போட்டி பாத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்று இந்தியா முதலில் துடுப்பெடுத்தாடியது. முதலில் களமிறங்கிய இந்தியாவின் நாயக் (5), ஜெயா சர்மா (0) என மோசமான ஆரம்பம் தந்தனர்.

அடுத்து களமிறங்கிய ஆஷா ரவாத் (0) எடுத்து சொதப்ப இந்தியா 3 விக்கெட் இழப்புக்கு 6 ஓட்டங்கள் மாத்திரம் எடுத்து திணறியது.

அடுத்து வந்த அமித்சர்மா,அணித்தலைவி மிதாலி ராஜ் ஜோடிபொறுப்புடன் ஆடி ஓட்டங்களை உயர்த்தியது.

அமித் சர்மா 34 ஓட்டங்கள் எடுத்த நிலையில் வெளியேறினார். அடுத்துவந்த ஹேம்லதா கலாவுடன் ஜோடி சேர்ந்த அணித்தலைவி மிதாலி ராஜ் 44 ஓட்டங்களை எடுத்தபோது ஆட்டமிழந்தார்.

கலா (10),பிரியங்கா ராய் (0) நிரஞ்சனா நாகராஜன் (1) நீத்து டேவிட் (0) கவுகர் சுல்தானா (6) ஏன சொற்ப ஓட்டங்களில் வெளியேற இந்தியப் பெண்கள் அணி 43.4 ஓவர்களில் 124 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இங்கிலாந்து சார்ப்பில் குகா, குன் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும் புறூன்ட், கால்வின் தலா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

125 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இங்கிலாந்து பெண்கள் அணிக்கு சராக் ரெய்லர் (16) கரோலின் அட்கின்ஸ் (45) எடுத்து நல்ல ஆரம்பம் தந்தனர்.

அடுத்துவந்த கிளைரி ரெய்லர் (40) மற்றும் அணித்தலைவி சார்லோடி எட்வேட்ஸ் (14) பொறுப்புடன் ஆடி 36-வது ஓவரில் 2 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 125 ஓட்டங்கள் எடுத்து இங்கிலாந்து அணி வெற்றி பெற்றது.

இந்தியா சார்பில் நிரஞ்சனா நாகராஜன் ஒரு விக்கெட் வீழ்த்தினார். இந்த வெற்றியின் மூலம் இங்கிலாந்து பெண்கள் அணி 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் 1-0 என முன்னிலை வகிக்கிறது.

பந்துவீச்சில் அசத்திய குன் ஆட்டநாயகியாக தேர்வு செய்யப்பட்டார். இவ்விரு அணிகள் மோதும் இரண்டாவது ஒருநாள் போட்டி இன்று நடக்கிறது. (5)

# ஐ.சி.சி சம்பியன்ஸ் தொடருக்கான இடம் மார்ச் மாதமே தீர்மானிக்கப்படும்

ஐ .சி.சி சம்பியன்ஸ் கிரிக்கெட் தொடரை எங்கு நடத்துவதென்பது குறித்து எதிர்வரும் மார்ச் மாதம் தீர்மானிக்கப்படும் என ஐ.சி.சி நிறைவேற்றுக்குழு தீர்மானிக்கவுள்ளது.

எதிர்வரும் 12ஆம் திகதி பாகிஸ்தானில் ஆரம்பமாகவிருந்த இச் சுற்றுப்போட்டியை 2009ஆம் ஆண்டு ஒக்டோபர் வரை ஒத்திவைப்பதாக கடந்தவாரம் ஐ.சி.சி அறிவித்தமை குறிப்பிடத்தக்கது.

எனினும் இச் சுற்றுப்போட்டி முதலில் திட்டமிட்டபடி பாகிஸ்தானி நடத்தப்படுமா என்பது இன்னும் தீர்மானிக்கப்படவில்லை.

பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அதிகாரி ஒருவர் இது குறித்து ஊடகமொன்றுக்கு தகவல்.தெரிவிக்கையில் மார்ச் மாதமே போட்டிகள் நடைபெறவுள்ள இடத்தை தீர்மானிப்பதற்கான கால எல்லையாகும் என்றார்.

இப்போட்டிகளை நடத்துவதற்கான பொருத்தமான திகதிகளை ஆராய்வதற்காக எதிர்வரும் 11,12 ஆம்திகதிகளில் ஐ.சி.சி மாநாடொன்றை நடத்துகிறது. ஆனால் இடம் எது என்பது மார்ச் மாதமே தீர்மானிக்கப்படும் என கூறியுள்ளார்.

பாகிஸ்தானில் பாதுகாப்பு அச்சுறுத்தல் இருப்பதாக பல வீரர்கள் கூறியதாலேயே இச்சுற்றுப்போட்டி ஒத்திவைக்கப்பட்டது. எனினும் அடுத்த வருடம் அங்கு விளையாடுவதற்கும் பல வீரர்கள் தயக்கத்தை வெளிப்படுத்துகின்றனர்.

ஐ.சி.சி இச் சுற்றுப்போட்டியை இடமாற்ற முடியும். ஆனால் பாகிஸ்தானுக்கு முப்பது இலட்சம் டொலர் நஷ்டஈடு செலுத்தவேண்டியிருக்கும்.

பாகிஸ்தான் நிலைமையில் மாற்றம் வருமா என்பதை அறிவதற்கு எதிர்வரும் 6 மாதங்கள் காத்திருப்பது என ஐ.சி.சியும் அதன் அங்கத்துவ நாடுகள் சிலவும் தீர்மானித்துள்ளன எனவும் அவர் கூறியுள்ளார்.

இச் சுற்றுப்போட்டிக்கான திகதிகளை தீர்மானிப்பதற்கு ஏற்ப ஐ.சி.சியின் எதிர்கால கிரிக்கெட் அட்டவணையில் மேற்கொள்ளப்படக் கூடிய மாற்றங்கள் குறித்த யோசனைகளை தெரிவிக்குமாறு ஐ.சி.சி தனது அங்கத்துவ நாடுகளை கோரியுள்ளது.

இதேவேளை இம்மாதம் நடைபெறவிருந்த சுற்றுப்போட்டியை ஒத்திவைக்கும் தீர்மானத்தை ஐ.சி.சி மேற்கொண்டபோதும் சில அங்கத்தவர்கள் இச் சுற்றுப்போட்டிக்கான புதிய இடம் குறித்த அறிவிப்பையும் வெளியிடவேண்டுமென கோரினர். எனினும் பாகிஸ்தான், இந்தியா ஆகிய நாடுகளின் எதிர்ப்பின் காரணமாக அக்கோரிக்கை கைவிடப்பட்டது எனக் கூறப்படுகிறது.

அவ்வாறான தீர்மானம் மேற்கொண்டால் இச்சுற்றுப்போட்டியில் இருந்து தமது அணி விலகும் என அச்சுறுத்திய இந்தியாவும் பாகிஸ்தானும் பொறுத்திருந்துபார்க்கும் யோசனையை முன்வைத்ததாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (5)

மாநகர சபை, யாழ்ப்பாணம்.



# கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய ஐவர் கைது

(யாழ்ப்பாணம்)

பல்வேறு கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய ஐந்து பேர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 28 ஆம் திகதி கொக்குவில் பகுதியில் பொதுமக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்ட இரு திருடர்கள் பொலிஸாருக்கு வழங்கிய தகவலையடுத்து மேலும் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும் ஒருவரைத் தேடி வருவதாகப் பொலிஸ்தரப்புத் தகவல்கள் தெரிவித்தன.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற பல்வேறு திருட்டுச் சம்பவங்களுடன் இவர்களுக்குத் தொடர்பிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவர்களிடமிருந்து பொருள்கள் சிலவும் மீட்கப்பட்டுள்ளன.

பிடிபட்ட இவர்கள் அனைவரும் சுமார் 25 வயதுக்குட்பட்டவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டது. இதேவேளை கொள்ளைச் சந்தேக நபர்கள் ஐவரும் யாழ்.மாவட்ட பதில் நீதிவான் ஆர். கேசவன் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட போது அவர்களை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ச-5)

## சைல்...

2.3 கிலோக்கிராம் நிறையுடைய சிறிய ரகச் சிலிண்டரின் விலை 23 ரூபாயினால் அதிகரித்துள்ளது. இதன்படி சிறிய ரகச் சிலிண்டரின் புதிய விலை 343 ரூபாயாக இருக்கும்.

இதேவேளை லாப் காஸ் விலையையும் அதிகரிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள போதிலும் இன்னும் ஓரிரு தினங்களிலேயே விலை அதிகரிப்பு மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-5)

## புறக்...

விடுதலைப்புலிகளுக்கும் தொடர்பிருப்பதாகத் தெரியவில்லை.

ஏனெனில் வெடிப்பதற்காக வைக்கப்பட்ட குண்டின் எடை 100 கிராமேயாகும். இவ்வளவு எடையுள்ள குண்டை நிச்சயம் விடுதலைப்புலிகள் பயன்படுத்தியிருக்க மாட்டார்கள்.

இது நடைபாதை ஓரக் கடைகளை அப்புறப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட ஒரு மறைமுகத் தாக்குதலாகும். இந்தத் தாக்குதலின் மூலம் அப் பகுதிக் கடை உரிமையாளர்களுக்கு மறைமுக எச்சரிக்கை விடுக்கப்பட்டிருக்கின்றது.

இந்தச் சம்பவத்தால் காயமடைந்த பலர் குண்டுவெடித்தவுடன் பதற்றமடைந்து ஓடி விழுந்து சாதுவான சிராய்ப்புக் காயங்களையே அடைந்துள்ளனர். ஒரு சிலரே படுகாயமடைந்துள்ளனர் என்று அவர் தெரிவித்துள்ளார். (ச-5)

## அரச...

திகதி ஆரம்பமாகுமென இரண்டாம் தவணை இறுதியில் கல்வி அமைச்சு அறிவித்திருந்தது.

எனினும் தற்போது க.பொ.த.உயர் தரப் பரீட்சை நிலையம் இல்லாத பாடசாலைகளும் எதிர்வரும் 4ஆம் திகதியே ஆரம்பமாகுமென கல்வி அமைச்சு நேற்று அறிவித்துள்ளதாக வடக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் வீ.இராசையா மேலும் குறிப்பிட்டார். (ச-5)

## இனந்...

அட்டைகளின் மூலம் தெரிய வந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்களில் நித்தியானந்தன் துஷ்யந்தன் என்பவர் மலேசியாவில் கல்வி கற்றுவிட்டு அண்மையில் இங்கு வந்துள்ளார் என அவரின் சடலத்திலிருந்து மீட்கப்பட்ட விசாவின் மூலம் தெரியவந்துள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட யாழ்.பதில் நீதவான் எஸ். கேசவன், பிரேத பரிசோதனைக்காக சடலங்களை யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு யாழ்ப்பாணப் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

இரு சடலங்களும் யாழ்.போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (ச-5)

## வன்னேரி...

கணைச் சூட்டாதரவுடன் முன்னகர்வுத் தாக்குதலை நடத்தினர்.

4 நாள்களாகப் படையினர் மேற்கொண்ட முன்னகர்வுத் தாக்குதல்களை விடுதலைப் புலிகள் முறியடித்தனர். இம் முறியடிப்பில் 20 படையினர் கொல்லப்பட்டனர். 60றக்கும் அதிகமான படையினர் காயமடைந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ச-5)

## பொறி...

மேற்கொண்டு வரும் படையினர் மீது விடுதலைப்புலிகள் நடத்திய தாக் குதல்களில் இதுவரை நால்வர் கொல்லப்பட்டுள்ளனர். நால்வர் காயமடைந்துள்ளனர். (எ-5)

## மக்களை வெளியேற...

அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து வரும் ஆயிரக் கணக்கான குடும்பங்களை தங்க வைப்பதற்கான திட்டங்களை அரசாங்கம் வகுத்து வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலிருந்து வெளியேறி அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு வருமாறு அரசாங்கம் வான் வழியாகத் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்திருந்தது.

அதேநேரம் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளை இந்த வாரம் தாம் சந்திக்க இருப்பதாக மனித உரிமைகள் அமைச்சர் மகிந்த சமரசிங்க கூறினார்.

இடம்பெயர்ந்த மக்கள் அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வர வேண்டும் என நாங்கள் பலவந்தப்படுத்தவில்லை. இடம்பெயர்ந்த மக்கள் சுதந்திரமாக நடமாட வேண்டும் என்றே நாங்கள் விரும்புகின்றோம்.

மக்கள் தமது சொந்த விருப்பப்படி நடந்து கொள்ள விடுதலைப்புலிகள் அனுமதிக்க மாட்டார்கள் என்பது எமக்கு நன்கு தெரியும் என அமைச்சர் தெரிவித்தார்.

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவில் இடம்பெயர்ந்த மக்களை வவுனியாவுக்கு வரவழைப்பதற்கான பாதை ஒன்றை அமைக்கும் முயற்சியிலேயே தாம் தற்போது ஈடுபட்டிருப்பதாகக் குறிப்பிட்ட அமைச்சர் இடம்பெயர்ந்து அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு வரும் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளோம் என்றார்.

இடம்பெயர்ந்து வரும் மக்களுக்கு வழங்குவதற்கென அரசாங்கம் நிவாரணப் பொருள்களை வவுனியாவில் களஞ்சியப்படுத்தும் நடவடிக்கைகளை ஏற்கனவே ஆரம்பித்திருப்பதாகவும் இந்த நடவடிக்கைகளில் யு.என்.எச்.சி.ஆர். மற்றும் உலக உணவுத் திட்டம் ஆகியன ஈடுபட்டிருப்பதாகவும் அமைச்சர் மகிந்த சமரசிங்க கூறினார். (ச-5)

## அரசாங்கத்தின் பிரசாரத்தை முறியடித்த...

வான் புலிகளின் இந்தத் தாக்குதல் பலரையும் ஆச்சரியத்தில் தள்ளியுள்ளது.

### இந்தியாவிலிருந்து தகவல்

வன்னியிலிருந்து இரு இலகு ரக வானூர்திகள் மேலெழுந்ததை வவுனியாவிலுள்ள ராடர்கள் முதலில் கண்டறிந்திருந்தன. இது இந்தியாவினால் வழங்கப்பட்ட ராடருக்குப் பொறுப்பான அதிகாரி இந்தத் தகவலைக் கொழும்புக்குத் தெரிவித்திருந்தார்.

அதன் பின்னர் வான்படையின் கட்டுப்பாட்டு அறை வேகமாக இயங்கத் தொடங்கியது. முதலில் வன்னிப் பகுதி படைத் தளங்கள் உயர் விழிப்பு நிலைக்குட்படுத்தப்பட்டன. அதன் பின்னர் திருகோணமலைத் தளமும் பொருளாதார முக்கியத்துவம் மிக்க பகுதிகளும் உயர் விழிப்பு நிலைக்குட்படுத்தப்பட்டன.

ஆனால் வான் புலிகளின் வானூர்திகள் முல்லைத்தீவிலிருந்து கடற்கரை வழியாகத் திருகோணமலைக்குச் சென்றது. வான் புலிகளின் வானூர்தி வானில் எழுந்த பல நிமிடங்களின் பின்னரே வவுனியாவிலுள்ள தளங்கள் அதனைக் கண்டறிந்துள்ளன.

அதாவது இந்தத் தடவையும் வான் புலிகள் தமது முன்னைய உத்திகளைப் பயன்படுத்தியுள்ளனர். மிகவும் தாழ்வாகப் பறந்த பின்னரே மேலெழுந்துள்ளனர். இதனிடையே வான் புலிகளின் வானூர்திகள் நிலா வெளிப் பக்கத்திலிருந்து வந்ததாகவும் கடல் மட்டத்திலிருந்து சில அடி உயரத்திலேயே அவை பறந்ததாகவும் கடற்றொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

எச்சரிக்கையைத் தொடர்ந்து திருகோணமலை கடற்படைத் தளத்திலிருந்த படையினர் வான் எதிர்ப்புத் தாக்குதலுக்குத் தம்மைத் தயார்படுத்திக் கொண்டிருந்தனர்.

ஆனால் எச்சரிக்கை கிடைக்கப் பெற்ற மூன்று நிமிடங்களில் வானூர்திகள் தளத் தை அண்மித்து விட்டன. தளத்தை அண்மித்ததும் ஆயிரம் அடிக்கு மேலே எழுந்த வானூர்திகள் குண்டு வீச்சுக்களை உடனடியாகவே தொடங்கின.

தளத்திலிருந்த வான் பாதுகாப்புப் பொறிமுறைகள் இயங்கியபோதும் வான் புலிகளின் குண்டு வீச்சுக்களை நிறுத்த முடியவில்லை. திருகோணமலைத் துறைமுகம், கடற்படைத் தளம், சீனன்குடாக் கடற்படைத் தளம் ஆகியவற்றிலிருந்த வானூர்தி எதிர்ப்புச் சாதனங்கள் தொடர்ச்சியாக 15 நிமிடங்கள் தாக்குதலை நடத்தின.

ஆனால் அதற்கு முன்னரே வான் புலிகள் குண்டு வீச்சுக்களை நடத்தி விட்டுத் தளம் திரும்பத் தொடங்கி விட்டன. ஒரு குண்டு கடற்படைத் தளத்தின் தங்குமிடத்தில் வீழ்ந்து வெடித்திருந்தது. இந்தக் குண்டே அதிக சேதத்தை ஏற்படுத்தியிருந்தது.

மற்றைய குண்டு காட்டுப் பகுதியில் வீழ்ந்திருந்தது. தாக்குதல் நடைபெற்றபோது வான் படை மற்றும் கடற்படைப் பேச்சாளர்களின் தொலைபேசிகள் இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

எனவே ஊடகவியலாளர்கள் அவர்களைத் தொடர்பு கொள்ள முடியவில்லை. கடற்படைப் பேச்சாளர் டி.கே.பி.தஸநாயக்க வெளிநாட்டுக்குச் சென்றிருந்தார். அரச தரப்பு இழப்பு தொடர்பாக குறைத்துக் கூறியபோதும் இந்தத் தாக்குதலில் 8 படையினர் கொல்லப்பட்டதாகவும் 38 பேர் காயமடைந்ததாக்வும் உறுதிப்படுத்தப்படாத தகவல்கள் தெரிவிக்கின்றன.

### ஜெட்லைனர் இலக்கு

அரச புலனாய்வுப் பிரிவினரின் தகவலின்படி வான் புலிகளின் இரு வானூர்திகளின் பிரதான இலக்கு ஜெட்லைனர் எனப்படும் பாரிய துருப்புக் காவிக் கப்பலாகும். இந்தக் கப்பலே படையினரை யாழ்.குடாநாட்டுக்கும் திருகோணமலைக்கும் கொண்டு செல்வதாகும்.

தாக்குதல் நடைபெற்றபோது தளத்தின் வெளிச்சங்கள் அனைத்தும் அணைக்கப்பட்ட நிலையில் கப்பலின் வெளிச்சங்கள் மட்டும் எரிந்தவாறு இருந்தது. பெருமளவிலான படையினரைக் கொல்வதே இந்தத் தாக்குதலின் நோக்கம்.

ஜெட்லைனரில் 3 ஆயிரம் படையினர் பயணம் செய்ய இருந்தனர். அவர்கள் திருகோணமலை இடைத் தங்கல் முகாமில் தங்க வைக்கப்பட்டிருந்ததாகப் படை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கடற்படைத் தளத்தில் பெருந்தொகையான படையினர் தங்கவில்லை எனில் வான் புலிகள் துருப்புக் காவிக் கப்பலைத் தகர்த்திருப்பார்கள். இது ஒரு உளவியல் நடவடிக்கை. இந்தத் தாக்குதல் விடுதலைப்புலிகளின் வங்கிக் கணக்குகளில் பல மில்லியன் டொலர்களைக் கொண்டு வரும் நோக்கத்துடன் நடத்தப்பட்டது.

இது வான் புலிகள் நடத்திய 6-வது வான் தாக்குதலாகும். எனினும் தெற்கில் இது 7-வது இலக்கு. ஆனால் 7-வது தடவை வான் புலிகள் தாக்கியபோதும் ஏன் அவர்களின் வானூர்திகளைச் சுட்டு வீழ்த்த முடியவில்லை? வான் படையினர் நடவடிக்கையில் இறங்குவதற்கு அதிக நேரம் தேவைப்படுவதாகக் கூறப்படுகின்றது.

இந்த இடைவெளியில் வான் புலிகள் வன்னிக்குப் பாதுகாப்பாகத் திரும்பி விடுகின்றனர். திருகோணமலை மீதான தாக்குதல் போர் தொடர்பான கணிப்பீட்டை முற்றாகவே மாற்றியிருக்கும் என்பதற்கான சாத்தியக் கூறுகள் அதிகம் உண்டு.

இதனிடையே திருகோணமலைத் தளத்தில் இருந்த படையினர் வான் புலிகளின் வானூர்த்திகளைச் சுட்டு வீழ்த்துவதில் செயற்றிறனுடன் செயற்பட்டார்களா? என்பது தொடர்பாக ஆராய்வதற்காக கொமடோர் தலைமையில் ஐவர் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது.

### ஏவுகணை பயன்படுத்தாதது ஏன்?

திருகோணமலைத் துறைமுகத்தில் வைக்கப்பட்டிருந்த தரையிலிருந்து வானுக்குப் பாயும் ஏவுகணைகள் ஏன் ஏவப்படவில்லை என்பது தொடர்பாகவும் கேள்விகள் எழுந்துள்ளன. திருகோணமலைக் கடற்படைத் தளத்தில் உள்ள வானூர்தி எதிர்ப்புப் பொறிமுறைகள் இயங்கியபோதும் ஏன் வான்புலிகளின் வான்ஹூர்திகள் சுட்டுவீழ்த்தப்படவில்லை என்பது தொடர்பாகவும் கேள்விகள் எழுந்துள்ளன.

இராணுவம் வன்னியில் அதிக நிலப்பரப்புக்களைக் கைப்பற்றி வருவதனால் வான் புலிகளின் நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப்பட்டு விடும் என பலரும் நம்பியிருந்தனர். திருகோணமலை வான் பரப்பில் தோன்றியிருந்த மழை முகில் கூட்டமும் வான் புலிகளுக்கு உதவி புரிந்திருந்தது. இது படையினருக்குப் பாதகமானது.

மேலும் பாரிய துருப்புக்காவிக் கப்பலின் செயற்பாடுகள் தொடர்பாக விடுதலைப்புலிகளுக்கு எவ்வாறு தகவல்கள் சென்றடைந்தன என்பது தொடர்பாகவும் விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அரச படையினரின் வானூர்தி எதிர்ப்புப் பீரங்கிக் குண்டுகள், வானிலிருந்து நிலத்தில் வீழ்ந்ததனால் பல பொதுமக்கள் காயமடைந்துள்ளனர் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)




A/L - 2009, 2008

**பௌதிகவியல், இணைந்த கணித வகுப்புகள்**

மேற்படி பாடங்களைப் பிரபல கல்லூரிகளில் கற்பித்து சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக் கொடுத்த ஆசிரியரினால் ஏராளமான பயிற்சிகளுடன் 20 வருட வினாத்தாள் உட்பட M.C.Q. க்குரிய விளக்க விடைகளுடன் சிறப்பாக தமிழ்/ஆங்கில மொழிகளில் கற்பிக்கப்படும். சிறு குழுக்களாகவும் தனிப்பட்ட முறையிலும் கற்பிக்கப்படும்.

சந்திப்பு தினசரி 3 மணிக்குப் பின்பு. முழுப் பாடத் திட்டம் குறுகிய காலத்தில் முடித்துக் கொடுக்கப்படும். வகுப்புகள் நடைபெறுகின்றன.

ஆசிரியர் :-
R.பாலசுப்பிரமணியம்
B.Sc., (Cey.) Dip.in Ed.
42/1, இந்துக் கல்லூரி ஒழுங்கை,
நீராவியடி, யாழ்ப்பாணம்.
(1647)

இப் பத்திரிகை வலம்புரி அ.ன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் ரோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.09.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.